# இலக்கணச்சுருக்கம்.

இது

தமிழ்ப்பாஷையின் எழுத்திலக்கணம்,
சொல்லிலக்கணங்களை யெளிதாகச்
சிறுபிள்ளைகள கற்கும்படிச் சுருக்க
மாகச்சொல்லுகின்றது.

---

# A SHORT GRAMMAR OF THE TAMIL LANGUAGE,

*For the use of Schools.*



MADRAS:
PRINTED AT THE AMERICAN MISSION PRESS, FOR
THE MADRAS TRACT AND BOOK SOCIETY.
1842.

# இலக்கணச்சுருக்கம்.

---

## முதலாவது.

### எழுத்தியல்.

க. தமிழ்ப்பாடையில், எழுத்துகள், உயிரெழுத்தும், மெய்யெழுத்தும், உயிர்மெய்யெழுத்தும், ஆய்தவெழுத்தும், என நால் வகைப்படும்.

உ. அவற்றுள், அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ, இவைபன்னிரண்டும், உயிரெழுத்தென்னப்படும்.

௩. இவற்றுள், அ, இ, உ, எ, ஒ, இவை யைந்துங் குற்றெழுத்தென்றும், ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ, இவை யேழும், நெட்டெழுத்தென்றும், பெயர் பெறும்.

௪. மேற்சொல்லியவுயிரெழுத்துகளுள், அ, இ, உ, என்னுமிம்மூன்றும் பொருள்களைக்குறித்துக் காட்டுகின்ற அர்த்தத்திலே, தனித்து மொழிக்குமுன்னே வருமானால், சுட்டெழுத்தென்றும் பெயர் பெறும்.

உதாரணம. அவன், இவன், உவன், எ-ம், அக்கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றன், எ-ம், வரும், மற்றைப்பால் இடங்களிலுங் கூட்டுக.

௫. ஆ, எ, ஏ, ஓ, என்பனவும், உயிர்மெய்களுள், யா, என்பதும், வினாப்பொருளைக்குறித்து வருமானால், வினாவெழுத்தென்றும் பெயர்பெறும். இவற்றுள், எ, யா, இரண்டுமொழிமுதல் வினாவாயும், ஆ, ஓ, இரண்டு மொழி யிறுதிவினாவாயும், ஏகாரம், மொழிமுதலீறென்னுமிரண்டிடத்து வினாவாயும்வரும்.

உதாரணம. எவன், எக்கொற்றன், யாவன், யாபால், எ-ம், அவனா, அவனோ, எ-ம், ஏவன், அவனே, எ-ம், வரும, மற்றப்பா லிடங்களிலும, வந்தானா, வந்தானோ, வந்தானே, எனவினைச்சொல் லிடத்துங் கூட்டிக்கொள்க.

௬. க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன், இப்பதினெட்டும், மெய்யெழுத்தென்னப்படும். இவற்றுள்- க், ச், ட், த், ப், ற், என்கின்ற ஆறும்- வல்லெழுத்தென்றும்- ங், ஞ், ண், ந், ம், ன், என்கின்ற- ஆறும்- மெல்லெழுத்தென்றும்- ய், ர், ல், வ், ழ், ள், என்கின்ற-ஆறும்-இடையெழுத்தென்றும், பெயர்பெறும். அன்றியும், உயிர், மெய், என்கின்ற இவ்விருவகையெழுத்துகளும், முதலெழுத்தென்றும், மற்றைய சார்பெழுத்தென்றும் பெயர்பெறும்.

௭. உயிர்மெய்யெழுத்துகளாவன, உயிர் பன்னிரண்டும், மெய்பதினெட்டுங்கூடி வருவனவாம். அவை கூடுங்காலொவ்வொரு மெய்யிற் பன்னிரண்டு பன்னிர

ண்டுயிர்மெய்யாக இருநூற்றுப்பதினாறாய் வரும். உ-ம். க், அ-க. க், ஆ-கா. க், இ-கி. க், ஈ-கீ. க், உ-கு. க், ஊ-கூ. க், எ-கெ. க், ஏ-கே. க், ஐ-கை. க், ஒ-கொ. க், ஓ-கோ. க், ஔ-கௌ. எனவரும். மற்ற ஙகரச்கரமுதலியமெய்களோடுமிவ்வாறே கூட்டி யிருநூற்றுப்பதினாறாய்வருதல்காண்க.

௮. இனி ஆய்தமென்பது, சிலவிடத்தில் உயிர்போலவும், சிலவிடத்தில்மெய்போலவும், வழங்கப்படுதலால், அது உயிர்க்குமெய்க்குமிடையிலே வைக்கப்பட்டது. அதற்கு வடிவு-ஃ-அல்லது-௯-என்பதாம். இவ்வாய்தத்தை அக்கேனமென்றுந் தனிநிலையென்றும், புள்ளியென்றுஞ்சொல்வதுண்டு.

௯. இவ்வெழுத்துகட்குக் கூறப்படுமாத்திரையென்பதற்கு அளவு, கண்ணிமைப்பொழுது, அல்லது கைநொடிப்பொழுதெனக்காண்க.

௰. குற்றுயிரைந்துக்கும் தனித்தனியொருமாத்திரையும், நெட்டுயிரேழிற்குந் தனித்தனியிரண்டுமாத்திரையும், தனிமெய்களுக்கும், ஆய்தத்துக்குந் தனித்தனியரைமாத்திரையும், நெடிலுங் குறிலுமாகிய விருவகையுயிர்மெய்களுக்கும், நெடிலுங்குறிலுமாகிய விருவகையுயிர்களுக்கோதிய மாத்திரைகளுமே யுண்டெனக்காண்க.

௰௧. இனிப் பன்னிரண்டுயிர்களும், க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ, என்னுமொன்பது உயிர்மெய்வருக்கங் களும், மொழிக்குமுதலாவனவாம். இவற்றுள், வவ் வருக்கத்துள், எட்டும், யவ்வருக்கத்துள், ஒன்றும், ஞவ்வருக்கத்துள், ஐந்துமேயாம். ஒழிந்தன வாகா வெனக்காண்க.

உ-ம. வழி, வாழி, விழி, வீழி, வெளி, வேழம, வையம, வெள்வி ளன். எ-ம. யாவன், எ-ம. ஞமலி, ஞாயிறு, ஞிமிறு, ஞெகிழி, ஞொ ள்கல், எ-மவரும. ஒழிந்த உயிர்முதலிய வெல்லாமொழிக்குமுதலா மாதலால்வற்றிற்குமுதாரணங்கண்டுகொள்க.

௰௨. ஈறு, எகரம், ஒகரம், ஒழிந்தபத்துயிர்களும், மெல்லெழுத்துள். ண், ம், ன், என்கிறமூன்றும் இடை யெழுத்துள், வகரமொழிந்த, ய், ர், ல், ழ், ள், என்னு மைந்தொற்றுமாகிய பதினெட்டுமொழி யிறுதியிலே நிற்குமெழுத்துகளாம்.

உ-ம. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, இவற்றுள். ஊ, இறைச்சி, ஏ, அமபு, ஐ, அழகு, ஓ, மதகு நீர் தாங்குபலகை, இவைதானே நின்றீறுயின பல, பலா, புளி, தீ, கடு, பூ, சே, கை, போ, வௌ, என, இவைமெ ய்யோடுகூடியீறுயின. இவையுயிரீறு, மண், நிலம, பொன், வேய், வேர், வேல், வீழ், தோள், எனவருமிவை மெய்யீறு, இவைசிறந்தன சிறவாதனவுஞ்சிலவுள அவைவிரிந்தநூலுட்காண்க. அவ், இவ், உவ், எவ், என்பன, அவற்றை, இவற்றை, உவற்றை, எவற்றை, எனப்பல வறிசொல்லாயவருதலால், வகரவீறுமுண்டெனக்கொள்க.

௰௩. இடைநிலை மயக்கமாவது, மெய்மயக்கமும், உயிர்மெய்மயக்கமுமென விருவகைப்படும். அவற்

றுள், மெய்மயக்கமாவது, பிறநிலைமெய்மயக்கமும், உடனிலைமெய்மயக்கமுமெனவிருவகைப்படும். என்னை யாதாகிலுமோரொற்று இடையிலே நிற்க அதனோடுவேறோரொற்று வந்துசேர்வது, பிறநிலைமெய்மயக்கம்.

உ-ம். திங்கள், பஞ்சு, நட்பு, வெண்பா, என்பனபோல்வன.

இனி யாதாகிலுமோரொற்றுநிற்க அதனோடு மற்றும் அவ்வொற்றுத்தானேவந்துசேர்வது உடனிலைமெய்மயக்கம்.

உ-ம். அக்கம், அங்ஙனம், அச்சம், அஞ்ஞை, அட்டை, அண்ணை, அத்தை, அந்நலார், அப்பன், அம்மை, அய்யன், அல்லி, அவ்வை, அள்ளல், அற்றம், அன்னை, எனவரும்.

பின்வருமுயிர் மெய்யிரண்டெழுத்தாதலால் முன்னின்றவொற்று ஒற்றோடுமயங்கிற்றெனக்காண்க. இவற்றுள் உடனிலைக்கேயுரியன- க், ச், த், ப்க்கள், பிறநிலைக்கேயுரியன- ர், ழ்க்கள், ஒழிந்தபன்னிரண்டொற்றுமுட்னிலை பிறநிலை யிரண்டிற்குமுரியனவெனக்காண்க. மயக்கம், மயங்குதல், மயங்குதலாவது ஒன்றோடொன்றுசேருதல், இனி யுயிர்மெய்மயக்கம்-- அல், அலை, கல், கலை, என நால்வகைப்படும். இம்மயக்கவிதிமொழி யிடையிலேயெனக்காண்க.

௰௪. இனிப்போலி யிலக்கணமாவது, எழுத்துப்போலி, பதப்போலி, எனவிருவகைப்படும். இவற்

றுள், எழுத்துப்போலி இரண்டெழுத்துக்கூடி யோ ரெழுத்தையொத்தொலிப்பதாம்.

உ-ம. அ, இ, ஐ. அ, ய், ஐ. அ, உ, ஔ. அ, வ், ஔ. க, இ, கை. க, ய், கை. க, உ, கௌ. க, வ், கௌ. எனவரும்.

இனிப்பதப்போலி, மொழிமுதற்போலி, மொழியி டைப்போலி, மொழியிறுதிப்போலி-என மூவகைப் படும்.

உ-ம். மஞ்சு, மைஞ்சு. மயல், மையல் என்றாற்போல்வன மொழி முதற்போலி. அரயன், அரையன். அமச்சு, அமைச்சு. என்றாற்போ ல்வன மொழியிடைப்போலி. அறம், அறன். குடல், குடர் என்றாற் போல்வன மொழியிறுதிப்போலி. பிறவுங்கண்டுகொள்க.

---

## பதத்திலக்கணம்.

ஒவ்வோரெழுத்தே தனித்தும், இரண்டெழுத்து முதலாகத்தொடர்ந்தும். ஒரு அர்த்தத்தைக்கொடுப் பதானால், அதுபதமாம்.

உ-ம். ஆ, ஈ, ஐ. கா, கை, கோ. சா, தா, தீ- என்றாற்போல்வன. பொருளைத்தந்த, ஓரெழுத்தொருமொழிகள். கனி, பழம், வைக் கோல், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, என்றாற்போல்வன, எழுத்துத்தொடர்மொழியெனக்காண்க.

௨. இனியிப்பதம் பகாப்பதம், பகுபதமெனவிரு வகைப்படும். இவற்றுள்,பகாப்பதம், பெயர்ப்பகாப் பதம், வினைப்பகாப்பதம், இடைப்பகாப்பதம், உரி ப்பகாப்பதம், எனநால்வகைப்படும்.

உ-ம். நிலம், நீர், பொன், பொருள், எனவும். நட, வா, உண், தின் எனவும். மன, மற்று, என்று, உம். எனவும், சால, உறு, தவ

நனி, எனவும்வரும். இவை பகுக்கப்படாதனவாய்த் தோன்றுதொட்டு ஒருபதமாகவே வருவனவெனக்காண்க.

௩. இனிப்பகுப்பதம், பெயர்ப்பகுப்பதம், வினைப்பகுபதமென விருவகைப்படும்.

உ-ம. பொன்னன், கண்ணன், கூனன், எ-ம. நடந்தான், வந்தான், உண்டான், தின்றான், எ-மவரும, நடந்தவன், வந்தவன், என்றற்போல்வன, வினையாலணையும் பெயர்ப்பகுபதமெனக்காண்க.

௪. இனி வினைப்பகுபதம், பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம், என்னும் அறுவகையுறுப்புகளாலும், இவற்றுளேற்பன சிலவற்றாலுமுடியுமெனக்காண்க.

உ-ம. நடந்தனன், வந்தனன், செத்தது, என்றற்போல்வன. ஆறு உறுப்புகளாலுமுடிந்தன. நடந்தான், ஆடினான், குழையன், என்றற்போல்வன சில குறைந்துவந்தன எனக்காண்க.

௫. இனிப்பகுதி, வினைப்பகுபதம், பெயர்ப்பகுபதமென்றவிரண்டிற்கு முன்னே நிற்கின்ற முதனிலைப்பகாப்பதங்களெனக்காண்க.

உ-ம. நடந்தான், வந்தான், உண்டான், வாழ்ந்தான், எ-ம. பொன்னன், கண்ணன், வில்லினன். எனவுங்காண்க.

௬. இனிவிகுதி, அன், ஆன், முதலிய வாயீற்றிலே நிற்பன.

உ-ம. நடந்தனன், வந்தனன், குழையன், நடந்தான், வந்தான், கருவூரான், இவற்றுள்; அன், ஆன், என்பன-ஆண்பாற் படர்க்கை விகுதிகள். நடந்தனள், நடந்தாள், வேல்விழியள், வேல்விழியாள், இவற்றுள்; அள், ஆள், பெண்பாற்படர்க்கைவிகுதிகள். நடந்தனர், நடந்தார், நடப்ப, வேலினர், வேலார், நம்பிமார், இவற்றுள்; அர்,

ஆர், ப, மார், இவைபல்லோர்படர்க்கைவிகுதிகள். நடந்தது, உறங்கிற்று, குழையது, இவற்றுள்; து, று, இவை ஒன்றன படர்க்கைவிகுதிகள். நடந்தன, நடவா, குழையின, இவற்றுள்; அ, ஆ, இவை பலவின படர்க்கைவிகுதிகள், இவ்வைம்பாலுமே, படர்க்கையிடமெனக்காண்க. நடந்தனென்; நடந்தேன், நடப்பல், நடப்பன், இவற்றுள்; என், ஏன், அல், அன், இவை தன்மை யொருமைவிகுதிகள். நடந்தனம், நடந்தாம், நடந்தனெம், நடந்தேம், நடந்தோம், இவற்றுள்; அம், ஆம், எம், ஏம், ஓம், இவை தன்மைப் பன்மைவிகுதிகள், இவ்விருபாலுமே தன்மையிடம். நடந்தனை, நடந்தாய், நடத்தி, நடவேல், இவற்றுள்; ஐ, ஆய், இ, ஏல், இவை முன்னிலை யொருமைவிகுதிகள். இனி நடவாமுதலிய ஏவல்வினைகளுமுன்னிலை யொருமையெனக்கண்டுகொள்க. நடந்தனிர், நடந்தீர், இவற்றுள்; இர்-ஈர், இவைமுன்னிலைப்பன்மைவிகுதிகள். உண்மின், உண்ணும, இவற்றுள்; மின்உம, இவைமுன்னிலைப்பன்மை யேவல்விகுதிகள். இவ்விருபாலுமே முன்னிலையிடம். வாழ்க, வாழிய, வாழியர், மகனெனல், மரீஇயதொரால், வரவேண்டும. இவற்றுள்; க, ய, ர், அல், ஆல், உம். இவைவியங்கோள்விகுதிகள். பிறவுங்கண்டுகொள்க.

## எ. இனி இடைநிலையாவன, இப்பகுதிவிகுதிகட்கு இடையேகாலங்காட்டி நிற்பனவாம்.

உ-ம. நடந்தான், வந்தான், வைத்தான், தேய்த்தான், த், உண்டான், கண்டான், தொட்டான், விட்டான், ட், சென்றான், தின்றான், பெற்றான், கற்றான், ற், உறங்கினான், ஊட்டினான், காட்டினான், இன், இவைஇறந்தகால இடைநிலைகள்- நடவாநின்றான், உண்ணாநின்றான், ஆநின்று, நடக்கின்றான், வருகின்றான், கின்று, நடக்கிறான், வருகிறான், கிறு, இவை நிகழ்கால இடைநிலைகள், நடப்பான், உண்பான், ப், வருவான், போவான், வ், இவை எதிர்கால இடைநிலைகள். உண்கு, வருது, உண்ப, உண்ணும், வாழ்க, வாழிய, உண்மின், புலம்புதி, என்றாற்போல்வன இடைநிலையின்றி வந்தவினைச் சொற்களெனக் காண்க.

௮. இனிச்சாரியையாவன; அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன், என்றாற்போல்வன. இவை விகுதிப்புணர்ச்சிக்கேயன்றிப் பதப்புணர்ச்சி உருபுப்புணர்ச்சியிலும்வருமெனக்காண்க.

உ-ம. வந்தனன், உண்டனன், அன். இருபான்மூன்று, ஒன்பானொடு, ஆன. சிலையினன், வாளினன், இன. தொடையல், அல். அவற்றை-அற்று. பதிற்றுப்பத்து, இற்று. நிலத்தன், அத்து. புளியங்காய், அம். எல்லார்தம்மையும், தம். எல்லாநம்மையும், நம். எல்லீர்நும்மையும், நும். கலனேதூணி, ஏ. பெரியவர், அ. சாத்தனுக்கு, உ. பண்டைக்காலம, ஐ. மொழிகுவன், கு. ஆன்கன்று, ன்.எனவரும.

---

## இனிச்சந்திவிகாரங்கள்மேலே காட்டப்படும்.

## புணர்ச்சியிலக்கணம்.

௧. பகாப்பதம் பகுபதமென்றவிருவகைப்பதங்களுந் தன்னோடுதானும் பிறிதோடுபிறிதாயும்புணரும்போது நிலைமொழியீறும்வருமொழிமுதலுமியல்பாகவேனும். விகாரப்பட்டேனும் புணர்வது புணர்ச்சியெனவும் இவ்வியல்பு விகாரங்கள் அல்வழி,வேற்றுமைப்பொருணோக்கம்பற்றிவருமெனவும், அவற்றுள் அல்வழிப்பொருணோக்கம்பற்றிவருவனவெல்லாம் அல்வழிச்சந்தியெனவும், வேற்றுமைப்பொருணோக்கம்பற்றிவருவனவெல்லாம் வேற்றுமைச்சந்தியெனவுங்காண்க.

உ. அவற்றுள் அலவழிச்சந்திபதினுலு. அவையாவன; வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை, எழுவாயத்தொடர், விளித்தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர்,தெரிநிலைமுற்றுத்தொடர், குறிப்புமுற்றுத்தொடர், இடைத்தொடர், உரித்தொடர், அடுக்குத்தொடர் எனக்காண்க,

உ-ம். அடுகளிறு-வினைத்தொகை இது பெயரெச்சம்போல அட்டகளிறு, அடுகின்றகளிறு, அடுங்களிறு எனமுக்காலம்பற்றிவிரியும். செந்தாமரை-பண்புத்தொகை, ஆயன் சாத்தன்-இருபெயரொட்டுப் பண்புத்தொகை;இவைசெம்மையாகியதாமரை, ஆயனாகியசாத்தன், எனவிரியும். மதிமுகம் உவமைத்தொகை, மதிபோன்றமுகமென விரியும். இராப்பகல் உம்மைத்தொகை, இராவும்பகலும் எனவிரியும். வேல்விழிவந்தாள், அன்மொழித்தொகை, வேல்போன்றவிழியினையுடையாள்வந்தாளெனவிரியும். இவ்வன்மொழித்தொகை, இங்கேசொல்லப்பட்டவைந்து தொகைச்சொற்களிலும பிறப்பதெனக் காண்க.

சாத்தன்வந்தான், இது எழுவாய்த்தொடர், சாத்தனுனவன்வந்தான், எனப்பொருள்படும். சாத்தாவா, இதுவிளித்தொடர்,சாத்தா நீவா, எனப்பொருள்படும். நடந்தசாத்தன், நடக்கின்றசாத்தன், நடக்குஞ்சாத்தன், இவைதெரிநிலைப்பெயரெச்சத்தொடர். பெரியசாத்தன், நல்லசாத்தன், இவைகுறிப்புப் பெயரெச்சத்தொடர். உண்டுவந்தான், உண்ணவந்தான், உண்ணின்வருவான், இவைதெரிநிலை வினையெச்சத்தொடர்.

வாளன்றிப்பிடியான், விருந்தின்றியுண்ணான், இவைகுறிப்புவினையெச்சத்தொடர். நடந்தான்சாத்தன், எ-து தெரிநிலை. குழையன்கொற்றன், எ-து குறிப்பு. இவையிரண்டு முற்றுத்தொடர். அணங்குகொல், அவளோ, இவையிடைத்தொடர். நனிபேதை, தவப்பல, இவையுரித்தொடர். படைபடை, தீத்தீ, இவையடுக்குத்தொடர். அலவழிச்சந்தி பதினான்கும், வந்தவாறுகாண்க.

௩. வேற்றுமைச் சந்தியாறு. அவற்றுள் தொகைநிலை தொகாநிலை, யிரண்டுமடங்கியே நின்றதெனக்கொள்க.

உ-ம். மரம்வெட்டினான், மரத்தைவெட்டினான், ஐ. கல்லெறிந்தான், கல்லாலெறிந்தான், ஆல். சாத்தன்மகன், சாத்தனுக்குமகன், கு. மலைவீழருவி, மலையின்வீழருவி, இன். சாத்தன்புத்தகம், சாத்தனதுபுத்தகம், அது. மலைமுழை, மலைக்கண் முழை, கண்ணெனவரும்.

இனி யிங்ஙனங் கூறிய வல்வழிவேற்றுமைச் சந்தியிருபதுந்தொகைநிலைத்தொடர், தொகாநிலைத்தொடரெனவிருவகையாகப்பகுக்கப்படுதலும், தழுவுதொடர், தழாத்தொடரெனக் கூறப்படுதலும், மேலே சாரியைசந்தி விகாரமென்றவற்றுள் சந்தியென்றது இவ்விருபது சந்தியிடைப்படுந்தோன்றல், திரிதல், கெடுதல்களையென்றலுங்கண்டுகொள்க.

௪. இனிப்புணர்ச்சி, இயல்புப்புணர்ச்சி, விகாரப்புணர்ச்சியெனவிருவகைப்படும். பொன்மணி, புகழழ

இது என்றாற்போல்வன. இயல்புப்புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி மூவகைப்படும்.

உ-ம். மலைத்தலை, தயிர்க்குடம், சாரைப்பாம்பு, பார்க்கன்னி என்றாற்போல்வன.

வேற்றுமைச்சந்தி, அல்வழிச்சந்தியென்கின்றவிரண்டினும் வல்லொற்றுத்தோன்றினமையால், தோன்றல் விகாரம். இகர ஈகார ஐகாரங்களின் பின் உயிர் வந்தால், மணியணி, மணியழகிது, தீயிடு, தீயெரிந்தது, மலையேறினான், மலையிது, எனவிருவழியும், யகரவொற்றுத் தோன்றும். மற்ற வுயிரின்பின் னுயிர்வந்தால், வகரந்தோன்றும்.

உ-ம். பல, பலா, கடு, பூ, சோ, கௌ, என நிறுத்தி, அருமை, அரிது, எனவருவித்து, இருவழியும், பலவருமை, பலாவருமை, பலவரிது, பலாவரிது, எனவகரவொற்றுத்தோன்றியவாறுகாண்க. பிறவற்றொடுமொட்டுக.

ஏகாரத்தின் பின்னுயிர்வந்தால் மேற்சொல்லியவிரண்டொற்றுந்தோன்றும்,

உ-ம். உழக்கேயளந்தது, உழக்கேயாழாக்கு, ஏவாடல், சேவேறினான் எனக்காண்க. இவ்விரண்டொற்றும் வருமுயிர்க்கு உடம்பாகவடுத்து நின்றமையின் உடம்படுமெய்யெனக்காண்க. இவ்வுடம்படுமெய்யைத் தோன்றல்விகாரமெனினும் அமையும். அறுபது, ஆப்பியரிது, நப்புணர்வில்லார், பொற்குடம், மட்குடம், இவைமுறையே ஆகார-ஈகாரங்கள்குறுகியும், நெடுமுதல்குறுகிமகரவொற்றுப்பகர வொற்றாகியும், னகர ணகரங்கள், றகர டகரங்களாகியும் நின்றமையால் திரிதல்விகாரம். வடகிழக்கு, குணகடல், பப்பத்து

ஐந்தூணி, மரவேர், இவைமுறையே ஈற்றுயிர்மெய்யும் வல்லொற்று மெல்லொற்றுங்கெட்டமையாற் கெடுதல்விகாரம் எனக்காண்க.

வினு. அறுற்சந்தியென்றது புணர்ச்சி விகாரத்தையெனக்கொண்டால், மேலேசாரியை சந்திவிகாரமென்றவற்றுள், விகாரமென்றதுயாதெனின்.

விடை. அது இனிச் சொல்லப்படுமொன்பது வகைச்செய்யுள் விகாரமேயாம. அதுஅலவழிவேற்றுமைப்பொருளுணக்கம பற்றுது செய்யுளிடத்து அடிதொடைமுதலிய பற்றிவருதலாற் செய்யுள்விகாரமெனப்படும.

௫. இனியிப்புணர்ச்சி விகாரமோரோர் புணர்ச்சிக்கண் ஒன்றேயன்றி யிரண்டுவருதலும் மூன்றுவருதலுமுண்டெனக்கொள்க.

உ-ம். மரவேர், இதிற்கெடுதல் விகாரமொனறேவந்தது. நிலப்பனை இதில் நிலைமொழியீற்று மகரங்கெட்டு வருமொழிமுதலிற் பகரந்தோன்றலின் இரண்டுவிகாரங்கள் வந்தன. பனங்காய், இதில், நிலைமொழியீற்று ஐகாரங்கெட்டு அம்முச்சாரியைதோன்றி யதனிறுதிமகரவொற்றுத் திரிந்தமையால் தோனறல் திரிதல் கெடுதல் விகாரங்கள் மூன்றும் வந்தன.

௬. இனிச்செய்யுள் விகாரமொன்பது வகைப்படுமென்றவற்றுள் அடிதொடைமுதலியபற்றிவரும்விகாரங்களாறெனவும் ஒரோர் சொற்கள் முதலிடைகடையென்னுமூன்றிடத்துக் குறைந்துவரும் விகாரங்கள் மூன்றெனவுங்காண்க.

௭. அறுவகைவிகாரங்களாவன, வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல் எனக்காண்க.

உ-ம். குறுந்தாளெனபதைக் குறுத்தாளெனமெல்லொற்றை வல்லொற்றுக்கலின் வலித்தல்விகாரம், தட்டையென்பதைத் தண்டையென வல்லொற்றை மெல்லொற்றுக்கலின் மெலித்தல் விகாரம், பொத்தருர் எனபதைப்போத்தருரெனக்குற்றெழுத்தை நெட்டெழுத்தாக்கலின் நீட்டல்விகாரம் தீயேன எனபதைத் தியேன என நெட்டெழுத்தைக்குற்றெழுத்தாக்கலிற் குறுக்கல்விகாரம், பெயரெச்சமே என்பதைப் பெயரெச்சம்மே என மகரவொற்றையும் தண்டுறையெனபதைத் தண்ணந்துறை என அம்முச்சாரியையும் விரித்தலின் விரித்தல்விகாரம், எய்தியக்கால், குன்றியக்கால் எனபவற்றை, எய்திக்கால், குன்றிக்காலென, யகரவுயிர்மெய்யைத் தொகுத்தலிற்றொகுத்தல் விகாரம் பிறவுங்கண்டுகொள்க.

அ. இனிமூவகைக்குறைதல் விகாரங்களாவன, தலைக்குறை, இடைக்குறை, கடைக்குறை எனக்காண்க.

உ-ம். தாமரை, இலக்கறிஎன்பன, மரை, லக்கறி எனக்குறைந்துவழங்குவன, தலைக்குறை, ஓந்தி, வண்டு, என்பன, ஓதி, வடு, எனக்குறைந்து வழங்குவன, இடைக்குறை, அம்பு, ஏமம். காமம், காலம் என்பன, அம், ஏமுறல், காமுறல், ஒருக்காலும் எனக்குறைந்து வழங்குவன, கடைக்குறையெனக்காண்க.

இவ்வொன்பதுவகை விகாரங்களுஞ்செய்யுளியற்றுவோர்வேண்டியவிடத்தில் விகாரப்படுத்தி யமைத்துக்கொள்வனவாம். புணர்ச்சிவிகாரம் பொருணோக்கம் பற்றித் தாமேவிகாரப்படுவனவெனக்காண்க.

௯. இனி உயிரீறு மெய்யீறென்ற விருவகையீற்று எவ்வகைப்பட்ட சொற்களுக்கும்பின் ஞ, ம, ய, வ, என்னும் நான்குயிர் மெய்கள்வரின் இயல்பாம்.

உ-ம. பல, பலா, புளி, தீ, அது, பூ, சே, கை, கோ, கௌ, எ-ம. மண், பொன், நிலம், வேய், வேர், வேல், வீழ், தோள், எனவும்நி று

த்தி, ஞான்றது, மாண்டது, யாது, வலிதுஎனவருவித்து, அல்வழிக்கும், ஞாற்சி, மாட்சி, யாப்பு, வன்மை எனவருவித்து வேற்றுமைக்கும், பலஞானறது, பலமாண்டது, பலயாது, பலவலிது, எ-ம. பலஞாற்சி, பலமாட்சி, பலயாப்பு, பலவன்மையெனவுமொட்டியிருவழியும் வருமொழியியல்பாதல்காண்க.

மற்றப்பலாமுதலியவற்றொடு மிவ்வாறே யொட்டியியல்பாதல்காண்க.

௰. ண், ள், ன், ல், இந்நான்கீற்றொழிந்த மற்றவீற்றுமொழிகள் முன் இருவழியும், நகரம்வந்தாலியல்பாமெனவுங்காண்க.

உ-ம். பல, பலா, நிலம, வேய் என. மேற்கூறியவாறே நிறுத்தி, நீண்டது, நீட்சியெனவருவித்திருவழியுமியல்பாதல்காண்க.

வருமொழி யியல்பாமெனவே நிலைமொழிவிகாரமிங்கேநோக்காதொழிக.

௰௧. குற்றெழுத்தின்பின்னின்ற யகர வொற்றீற்றுமொழியும் உயிராகவாயினு முயிர்மெய்யாகவாயினுந் தனித்த ஐகாரவீற்றுமொழியும், நொ, து, என்னுமிரண்டு ஓரெழுத்தொரு மொழிகளுமாகிய இவற்றின் முன், ஞ, ந, ம, க்களவரின் மிக்குமுடியவும்பெறும்.

உ-ம. மெய்ஞ்ஞானற்று, மெய்ஞ்ஞாற்சி, மெய்ந்நீண்டது, மெய்ந்நீட்சி, மெய்ம்மாண்டது, மெய்ம்மாட்சி எனவிவ்வாறே, கைஞ்ஞாற்சியெனவொட்டுக. நொஞ்ஞெழியா, நொந்நாகா நொம்மாடா, எனவிவ்வாறே, துவ்வெனபதனொடுமொட்டி, நொ, து, முதனிலைவினைச்சொற்களாதலாலல்வழிக்கண்மிகுமெனக்காண்க.

றோ, து, என்பனவற்றிற்குப் பொருள் முறையே. நீ றோந்துபோ, நீ சாப்பிடு எனவறிக.

௰௨. இனிப்பொதுப் பெயருயர்திணைப் பெயர்களினீற்றிலே நின்றமெய்யெழுத்துகள் வல்லினம் வரினியல் பாயிருவழியுமெனக்காண்க.

உ-ம். சாத்தன், கொற்றன், நம்பன், அவன் எனநிறுத்தி, குறியன், சிறியன், தீயன், பெரியன் எனவருவித்து. சாத்தன்குறியன், கொற்றன்குறியன், நம்பன்குறியன், அவன்குறியன் எனவொட்டியல்வழிக்கும், கை, செவி, தலை, புறம என்பன்வற்றோடொட்டிவேற்றுமைக்குமியல்பாதல்காண்க.

மற்றச்சிறியன், தீயன், பெரியன், என்பனவற்றோடுமொட்டுக. இங்கேசாத்தன்-றீயன், எனவருமொழி விகாரம் நோக்காதொழிக. நிலைமொழியியல்பாதலே காண்க பிறவுமன்ன.

௰௩. இனி யிவ்விருவகைப்பெயர்களின், உயிரீறு, யகரவீறு, ரகரவீறுகளின் முன்வருமொழிவல்லெழுத்துமிகாதெனவுங்காண்க.

உ-ம். சாத்தி, கொற்றி, நம்பி, நங்கை என நிறுத்தி மேற்கூறியவாறே யவற்றிற்கேற்றவல்லினமுதன்மொழிவருவித்து இருவழியும் வருமொழியியல்பாதலும், தாய், சாத்தர், கொற்றர், அவர்என நிறுத்தியவற்றிற்கேற்றவல்லெழுத்துமுதன்மொழி வருவித்து வருமொழியியல்பாதலுங்காண்க.

தாய்குறியள், தாய்குறிதுஎனவொட்டுக. சாத்தன், கொற்றன், சாத்தி, தாய், என்பனவற்றைப் பொதுப் பெயரென்றதென்னெனின், சாத்தனிவன், சாத்தனி

வ்வெருது, சாத்தியிவள், சாத்தியிப்பசு, தாயிவள்,
தாயிப்பசு என இருதிணைக்கண்ணும் விரவிவருதலாற்
பொதுப்பெயரென்க.

௰சு. இனி யிருவகையீற்றுயாதிணைப் பெயரிற் சில
தமக்கேற்ற விகாரமாயும்வரும். நாற்கணத்தின்முன்
னுமெனக்காண்க. நாற்கணமாவன. வன்கண்மென்
கண் ணிடைக்கண் ணுயிர்க்கண் ணெனக்காண்க.

உ-ம. ஆடூஉக்குறியன், மகடூஉக்குறியள், ஆடூஉக்கை, மகடூஉக்
கை எ-ம். வடுகன், அரசன், வடுகவரசன், வடுகரசன், வடுகநாகன்,
வடுகக்கண்ணன், வடுகங்கண்ணன், குமரன்கோட்டம், குமரகோ
ட்டம், குமரக்கோட்டம, தட்டார்தெரு, தட்டார்த்தெரு, தட்
டாரத்தெரு எனவும்வரும்பிறவுங்காண்க.

௰ரு. இனியியல்பீறு விதியீறென்ற விருவகை யுயிரீ
ற்றின்பின் வல்லின முதன்மொழிவந்தாற் பெரும்பா
லுமிக்குமுடியுமெனக்காண்க.

உ-ம். பலாக்காய், புளிக்கறி, தீப்பகை, உடுத்திரள், பூக்கடை,
ஏக்கொட்டில், சாரைப்பாம்பு, உறைக்கிணறு, பறைச்சேரி, பனை
த்திரள், கோக்கிழமை, கோக்கணம், இவையியல்பீறு, பணப்பெட்
டி, மடப்பிடி, வட்டக்கல், மரத்தாலி, கொற்றக்குடை. இட்டப்ப
டி, கிழக்குரங்கு, மணப்பெண்டிர், நாடகக்கணிகை, கீழைச்சேரி,
மேலைக்கோபுரம், ஒற்றைக்கை, இரட்டைப்பிள்ளை, வெட்டைப்பா
க்கு இவைபோல்வன. விதியீறு விதியீருவது இயல்பீறொழிந்து மற்
றோரீருய்நிற்பது, வட்டக்கல் என்பதுவட்டம் என்னு மகரவீறுகெ
ட்டு, அகரவீருய் நின்றது இரட்டைப்பிள்ளை எ-து. இரண்டு என்
னுங்குற்றுகரவீறுகெட்டுஐகாரவீருய்நின்றது பிறவுங்காண்க.

தொட்டுப்பார்த்தான், கெட்டுப்போனன், சொல்

வித்தந்தான், கொள்ளக்குறைபடா, எனவினையெச்சத்தில்மூன்றும் இனிக்காண்பேன். தவப்பல, கடிக்கமலம், எனவுரிச்சொன்மூன்றும், காரெனக்கறுத்தது, மற்றைப்போழ்து பலகுளாத்துன்பம், என இடைச்சொன் மூன்றுமிக்கன் பிறவுங்காண்க. இனிப்பெரும்பாலுமிகுமெனவே சிறுபான்மை மிகாவெனவுங் கொள்க.

உ-ம். சாத்தனைக்கொண்டான், கொற்றனோடுசென்றான், யாபல, சாத்தாகொள், நடகொற்றா, உண்டிகொற்றா, உண்டனைகொற்றா, உண்ணியகொண்டான், கொண்டுபோனான், கண்டுகொண்டான், நடந்தசாத்தன், நடவாதசாத்தன், பெரியகொற்றன், இல்லாதபோழ்து, உண்டன்குதிரைகள், சென்றனசேனைகள், பலகுதிரை, சிலகுதிரை, அம்மகொற்றா, பருத்திகுறிது, நாரைகுறிது, வரகுகுறிது, வரகுகதிர், குரங்குகுறிது, எஃகுகடிது எனவரும்பிறவுங்கண்டுகொள்க.

௰௬. இனி யுகரவீறு, குற்றுகரவீறு, முற்றுகரவீறெனவிருவகைப்படும். அவற்றுள, குற்றுகரவீறு, நெடிற்றொடர், ஆய்தத்தொடர், உயிர்த்தொடர், வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர் எனஅறுவகைப்படும். எனவும், இவற்றில்முன் உயிர்வந்தால் குற்றுகரங்கெடுமெனவும், யகரம்வந்தாலவ்வுகரமிகரமாகத்திரியுமெனவுங்காண்க.

உ-ம். முறையே, நாடு, எஃகு, வரகு, கொக்கு, குரங்கு, தெள்கு, எனநிறுத்தி, அரிது எளிது எனவருவித்து, நாடரிது, நாடெளிது, எஃகரிது, எஃகெளிது, எனவொட்டியுகரங் கெட்டமையும,

அவற்றொடு, யாதென்பதனைக்கூட்டி, நாடியாது, எஃகியாது, எனவொட்டி யுகர மிகரமாகத்திரிந்தமையுங்காண்க.

பிறவற்றொடுமிவ்வாறேயொட்டிக்கொள்க. இனிச் சிறுபான்மை முற்றுகரமு மிவ்விதி பெறுமெனக் கொள்க.

உ-ம். கதவு, கனவு, என நிறுத்தி, அழகிது, ஆன்றது, யாதுயென வருவித்து; கதவழகிது, கதவான்றது, கதவியாதுஎனவொட்டியவ் விரண்டுவிதியும்பெற்றமைகாண்க.

ஏனை யதனொடுமிவ்வாறேயொட்டிப்பிறவுங் கண்டு கொள்க.

௰௭. இனி நெடிற்றொடர்க் குற்றுகரமும் உயிர்த் தொடர்க் குற்றுகரமுமாகியவிருவகைக்குற்றுகரமொழிகளில் ட், ற், ஒற்றுக்கள்பெரும்பாலுஞ் சிறுபான்மை, தகரவொற்றுக்ககர வொற்றுக்களு மிரட்டித்து நிற்குமெனக்காண்க.

உ-ம். ஆட்டுக்கால், மாட்டுக்கால், ஆற்றுக்கரை, ஊற்றுக்கரை, எ-ம். குருட்டுக்கோழி, வறட்டெருமை, வயிற்றுப்பசி, பயற்றுக்கஞ்சி எ-ம். எருத்துமாடு, எருத்துப்பொதி- வெருக்குப்பூனை, வெருக்குக் கண். எ-ம். டறவொற்றுக்கள், பெரும்பாலுஞ் சிறுபான்மைமற்ற வொற்றுக்களுமிரட்டித்துநிற்றல்காண்க. பிறவுங்கண்டுகொள்க.

௰௮. இனிமென்றொடர்க் குற்றுகரமொழிகளுள் வன்றொடர்க்குற்றுகரமொழிகளாய்த்திரிந்து நிற்பனவுஞ்சிலவுளவெனக்கொள்க.

உ-ம். மருந்துப்பை, மருத்துப்பை, மருந்துவர், மருத்துவர் பாம்புக்கால், பாப்புக்கால், செம்புக்குடம், செப்புக்குடம், இரும்

புப்பெட்டி, இருப்புப்பெட்டி, குரங்கினம், குரக்கினம், வேம்பெண்ணெய், வேப்பெண்ணெய், வேப்பங்காய், கரும்புக்கட்டி, கருப்புக்கட்டி, கருப்பங்கட்டி, என்புடம்பு, எற்புடம்பு, அன்புத்தளை, அற்புத்தளை, எனவரும்பிறவுங்காண்க.

இவற்றுள் மென்றொடர்வன்றொடராதலேயன்றி, அம்முச்சாரியை யிடையிலேபெற்றுவருதலுங்காண்க.

௰௯. இனியையகாரத்தையீற்றிலேபெற்ற குற்றுகர மொழிகளுஞ்சிலவுளவெனக்கொள்க.

உ-ம். ஒற்றைக்குடை, ஒற்றையாழி, இரட்டைப்பிள்ளை, அற்றைக்கூலி, இற்றைநாள், வெட்டைப்பாக்கு, பண்டைநாள், இன்றைத்தினம், நேற்றைத்தினம் எனவரும். இயல்பாகவே ஐகாரம்பெற்று நின்றனவும், மென்றொடர்வன்றொடராய் ஐகாரம்பெற்று நின்றனவுங் காண்க.

உ௰. எகரவினாவுமூன்றுசுட்டுக்களுமாகிய இவற்றின்முன் உயிர்முதன்மொழியும், யகரமுதன்மொழியும் வந்தால், வகரவொற்றும், பிறமெய்முதன்மொழிகள் வந்தால், அவ்வந்தமெய்களுமிக்குமுடியும்.

உ-ம். எ, அ, இ, உ—என நிறுத்தி அணி, எருது, ஒந்தி, யானை, எ-ம். கலம், கிலை, தலம், பயன், மரம், வழி, எனவும்வருவித்துமுறையே எவ்வணி, எவ்வெருது, எவ்வோந்தி, எவ்யானை, எ-ம். எக்கலம், எச்சிலை, எத்தலம், எப்பயன், எம்மரம், எவ்வழி, யெனவும் ஒட்டி வகரமும், வநதமெயகளுமிக்கவாறுகாண்க.

ஒழிந்தசுட்டுக்களோடுமிவ்வாறேயொட்டுக.

உக. இனிச்சுட்டுநீளுதலும் நீண்டவழியுயிர்வரின் யகரவொற்றுத்தோன்றலுமாமெனக்கொள்க.

உ-ம். இது-ஒன்று, ஈதொன்று, அ-வயின், ஆவயின்; அங்கு, ஆங்கு, இங்கு, ஈங்கு, உங்கு, ஊங்கு, எ-ம். அ இடை, ஆயிடை, அ-இருதிணை, ஆயிருதிணை, எ-ம். வரும்பிறவுங்காண்க.

௨௨. இனித்தனிக்குறிலைச்சார்ந்து நின்றவொற்றுக் களுயிர்வரினிரட்டித்துநிற்கும்.

உ-ம். மண், கம், பொன், மெய், சொல், முள் என நிறுத்தி, அரிது, அருமை எனவருவித்து. மண்ணரிது, மண்ணருமை, கம்மரிது, கம்மருமை, பொன்னரிது, பொன்னருமை யெனவொட்டியிருவழி யும் ஒற்றிரட்டித்தமைகாண்க.

பிறவற்றொடும், பிறவுயிர் முதன் மொழிகளையு மொட்டுக.

௨௩. இனி யகரந்தவிர்ந்த மெய்யீற்றின் முன்யகர ம்வந்து புணரின், இகரந்தோன்றுதலுந் தோன்றாமையுமுள்வெனக்கொள்க.

உ-ம். தூண்யாது, தூணியாது, மண்யாது, மண்ணியாது, வாள்யாது, வாளியாது, கள்யாது, கள்ளியாது எ-ம். தூண்யாப்பு, தூணியாப்பு, மண்யாப்பு, மண்ணியாப்பு எனவுமிருவழியுங்காண்க.

பிறமெய்யீற்றுமொழிகளோடு மொட்டிக்கொள்க.

௨௪. இனிச்சில ஒற்றீற்றுத் தொழிற்பெயர்களும், ஏவல் வினைகளுமாகியவிவற்றின் முன், யகரமொழிந்த மெய் முதன்மொழிகள்வரின், உகரச்சாரியைபெறுதலும், சில ஏவல்வினைகள், பெறாமையுமுளவெனக் கொள்க.

உ-ம். உண், திரும், செல், கொள் எனநிறுத்தி. கடிது, கடுமை, சிறிது, சிறுமை எனவருவித்து, உண்ணுக்கடிது, உண்ணுக்கடுமை யெனவொட்டித்தொழிற்பெயருகரம் பெறுதல்காண்க.

பிறவற்றொடுமொட்டுக, உண்ணுதற்றொழிலானது கடிது, உண்ணுதற்றொழிலினது கடுமையெனவிரியும். உண்ணுகொற்றா, உண்கொற்றா. திருமுகொற்றா, தின்னுகொற்றா, தின்கொற்றா. செல்லுகொற்றா, செல்கொற்றா. கொள்ளுகொற்றா, கொள்கொற்றா. ஈருகொற்றா, ஈர்கொற்றா. போழுகொற்றா, போழ்கொற்றா என ஏவல்வினை யுகரம்பெறுதலும், பெறாமையுங்காண்க. பிறவற்றொடுமொட்டுக, இவ்வேவல்வினைகளுள், மகரவீற்றேவல் வினையுகரச்சாரியை பெற்றே வருதலும், ஏவல்வினை, தொழிற்பெயர்கள் சாரியை பெறாதவழிநின்றவொற்றுகளொடு மயக்கவிதியில்லாத மெய்கள்வரின், நின்றேவா. எனவிகாரப்படுதலுமுய்த்துணர்ந்துகொள்க. பார்கொற்றா வீழ்கொற்றா ஆள்கொற்றா என்றாற்போல்வன. உகரச்சாரியைபெறாது நின்றன.

உரு. இனிமகரவீறுகெட்டு உயிரீறுபோலே நின்று அது நாற்கணத்துமுன்னெவ்வாறுபுணருமோ, அவ்வாறுபுணரும்.

உ-ம். மரவடி, இது ஈறுகெட்டு உயிர்வர உடம்படுமெய்பெற்றது மரக்கோடு, இது ஈறுகெட்டு வல்லொற்றுமிக்கது, மரநார்,

மரவேலி, இவை யீறுகெட்டு இயல்பாயின. இவ்விதி யிருவழியுங் கொள்க.

உசா. இனிமகரவீறுகெடாதிருவழியும் வந்தவல்லெழுத்திற்கின வெழுத்தாய்த்திரிதலுமாமெனக்கொள்க.

உ-ம். மரங்குறிது, மரஞ்சிறிது, மரந்தீது எ-ம். மரங்குறைத்தான், மரஞ்சிதைத்தான், மரந்தேய்த்தான் எனவும்வரும். பகரமினமாதலிற்றிரியாதென்க.

உஎ. இனிமகரவீறு வேற்றுமைச்சந்தியிற் கெட்டு ஒருகால் வல்லெழுத்து மொருகால் மெல்லெழுத்து மிகுமெனக்கொள்க.

உ-ம். குளக்கரை, குளங்கரை, கலக்குறை, கலந்துறை எ-ம். பிறவுங்காண்க.

உஅ. இனியல்வழிக்கண் மகர வீறு கெடாது உயிர்க்கண் மிடைக்கண் மவரின் இயல்பாதலுமாம்.

உ-ம். குளமழகிது, குளம்யாது, குளம்வலிது எனவரும். குளம்யாத்தான், குளம்வெட்டினான் என்பன ஐகாரவேற்றுமைத் திரிபாதலினியல்பாயின பிறவுங்காண்க.

உகூ. இனிக் குற்றெழுத்தை யடுத்துநின்ற மகரவொற்று ஞநக்கள்வருமாயின வையாயத்திரியவும் பெறுமெனக்கொள்க.

உ-ம். அம், நும், தம், எம், நம் எனநிறுத்தி, ஞாண், நாண் எனவருவித்து. அஞ்ஞாண், நுஞ்ஞாண், தஞ்ஞாண், எஞ்ஞாண், நஞ்ஞாண் எ-ம். அந்நாண், நுந்நாண், தந்நாண், எந்நாண், நந்நாண் எனவுமொட்டியவ்வாறுதல்காண்க. பிறவுமன்ன.

ஙய. இனி ணனக்கள் வல்லினம்வந்துபுணரின், டறக்களாய்த்திரியும் சிறுபான்மை யியல்புமாகும்.

உ-ம். மட்குடம், பொற்குடம், மட்சாடி, பொற்சாடி, மட்டட்டு, பொற்றட்டு, மட்பானை, பொற்பானை எனத்திரிதலும், விண்பறந்தான், மண்புகுந்தான், மண்குடம், பொன்குடம், குயின்குழாம் எயின்குடியெனச்சிறுபான்மை யியல்பாதலுங்காண்க.

அல்வழியியல்புகூற வேண்டாமையினிவ்விதி வேற்றுமைக்கேகொள்க.

௰௧. இனி நெடிலையுங் குறிலிணையையுஞ் சேர்ந்த ணனக்கள்வந்த நகரந்திரிந்தபோதுகெடும்.

உ-ம். தூண், பரண், மான், பயன் என நிறுத்தி. நன்று, ந்ன்மை எனவருவித்து. தூணன்று, தூணன்மை, மானன்று, மானன்மை, பரணன்று, பரணன்மை, பயனன்று, பயனன்மை எனவொட்டிவந்து நகரந்திரிதலும் நின்ற ணனக்கள் கெடுதலும் பிறவுங்காண்க.

௰௨. இனி ணனக்கள்முன்வந்த தநக்கள் டணக்களாகத்திரியும்.

உ-ம். கண்டிறந்தான், கண்ணன்று, முட்டைத்தது. முண்ணன்று, முட்டடிந்தான், முண்ணீக்கினான் எனவரும்பிறவுங்கண்டுகொள்க.

௰௩. இனி னலக்கள்முன்வந்த தநக்கள் றனக்களாகத்திரியும்.

உ-ம். பொன்றீது, பொற்றீமை, பொன்னன்று, பொன்னன்மை, சொற்றீது, சொற்றீமை, சொன்னன்று, சொன்னன்மை எனவரும். இவ்விதியீரிடத்துங்கொள்க. பிறவுமன்ன.

௰௪. இனி லளக்கள் வேற்றுமைக்கண் றடக்களாகும் வல்லெழுத்துவந்து புணரின்,

உ-ம். கற்குடம், பாற்குடம், பாற்சோறு, பாற்றாழி, பாற்பானை, முட்காடு, தாட்கமலம், வாட்சேனை, வாட்டிறல், வாட்படை என வரும்பிறவுங்காண்க.

௫௫. இனி யிவை யல்வழிக்கண்ணியல்பாயுந் திரிந்தும்வரும்.

உ-ம். கல்குறிது, கற்குறிது, முள்குறிது, முட்குறிது எனவரும் பிறவற்றொடுமொட்டிக்கொள்க.

௫௬. இனி யிவைமெல்லினம்வந்து புணரின், னணக்களாகத்திரியும்.

உ-ம். கல், முள் எனநிறுத்தி. ஞெரிந்தது. நலிந்தது, மெலிந்தது, ஞெரிவு, நலிவு, மெலிவு எனவருவித்து, கன்ஞெரிந்தது, கன்ஞெரிவு, முண்ஞெரிந்தது, முண்ஞெரிவு எனவொட்டி யிருவழியும், திரிந்தமைகாண்க. பிறவற்றொடுமொட்டுக.

௫௭. இனி நெடிலையுங் குறிலிணையையுஞ் சேர்ந்த லளக்கள் அலவழியிலே வந்த தகரந் திரிந்தபோது கெடும்.

உ-ம். பால், தீது, பாறீது, பரல் தீது, பரறீது, தேள்தீது, தேடீது, திரள்தீது, திரடீது எனவரும்பிறவுங்காண்க.

௫௮. இனி யிருவழியும் தனிக்குறிலைச்சேராத அவ்விரண்டொற்றுகள் நகரம்வந்தாற்கெடும்.

உ-ம். பால், நன்று-நன்மை, பானன்று, பானன்மை, பரல், நன்று-நன்மை, பரனன்று, பரனன்மை எ-ம். தேள், நன்று-நன்மை, திரள், நன்று-நன்மை, தேணன்று, திரணன்று, தேணன்மை, திரணன்மை எனவும்வரும்பிறவுங்காண்க.

௫௯. இனி யரழக்கள் வல்லெழுத்தொடு புணரும்போது இயல்பாதலும் மிகுதலும் இனத்தோடு றழ்தலுமாம்.

உ-ம். வேய், வேர், வீழ் எனநிறுத்தி. குறிது, சிறிது, தீது, பெரிது எனவருவித்து. வேய்குறிது, வேர்குறிது, வீழ்குறிது எனவொட்டியியல்பாதலும். பேய்க்கன்னி, பார்க்குமரி, பூழ்ப்பறவை, நாய்க்கால், தேர்க்கால், பூழ்க்கால், எனமிகுதலும். வேய்க்குறை, வேய்ங்குறை, ஆர்க்கோடு, ஆர்ங்கோடு, பாழ்க்கிணறு, பாழ்ங்கிணறு என இனத்தோடு றழதலுங்காண்க.

இவற்றுள் இயல்பாயேவருதலும், மிக்கேவருதலும், அல்வழிக்கெனவும், மிக்கேவருதலும், இனத்தோடு றழ்ந்து வருதலும் வேற்றுமைக் கெனவுங்காண்க. பிறவுமறிந்துகொள்க.

---

## உருபுபுணரியல்.

௧. வேற்றுமையுருபாவன, தம்மையேற்றபெயர்ப் பொருளை விகாரப்படுத்தற்பொருட்டு, அப்பெயரின் பின்வருவனவாய, இடைச்சொற்களேயாம்.

௨. அவற்றுள்முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்குமுருபுபெயரும், பெயரதுவிகாரமுமே யாதலால், தமக்கென உருபுடையன இடைநின்ற இரண்டாம்வேற்றுமைமுதல் ஏழாம்வேற்றுமைவரையுள்ள ஆறுவேற்றுமைகளேயெனக்காண்க.

உ-ம். ஐ, ஆல், கு, இன், அது, கண்-எனவரும்இவற்றுட்சிலவற்றிற்குப்பரியாய வுருபுகளுமுள அவைமேலே காட்டப்படும்.

௩. முதல்வேற்றுமைக்கு உருபு திரிவில்லாதபெய ரேயாம். அதுவினையையும் பெயரையும் வினாவையுங் கொண்டுமுடியும்.

உ-ம். தேவன்வந்தான்-எ-ம். தேவனிவன்-எ-ம். தேவன்யாவன் எ-ம்-வரும்.

௪. இரண்டாம்வேற்றுமைக்கு உருபு ஐ, என்பதே யாம், இயற்றப்படுதலும், வேறுபடுக்கப்படுதலும், அடையப்படுதலுமாகிய செயப்படுபொருளே யதன் பொருளாம்.

உ-ம். கோயிலைக்கட்டினான் எ-ம். மரத்தைவெட்டினான் எ-ம். ஊரைச்சேர்ந்தான் எ-ம் வரும். இனிக்குழையையுடையன்என்பதும். புலியையொத்தான் என்பதும். எய்தப்படுபொருள், இல்லைத்துறந் தான் என்பது. திரிக்கப்படுபொருள், திரிதலையுலாவல், வேறுபாடு கெடுதற்குமாம் ஆதலால். பிறவுங்காண்க.

௫. மூன்றாம்வேற்றுமைக்கு உருபுமேற்கூறியஆலே யன்றி, ஆன், ஒடு, ஓடு என்பனவுமாம். ஒடுவென்பது, உடனெனவுந்திரிந்துவரும்.

உ-ம். மண்ணாற்செய்தகுடம், திரிகையாற்செய்தகுடம் என்பன. கருவிப்பொருள், அரசனாற்கட்டப்பட்டகோயில், தச்சனாற்கட்ட ப்பட்டகோயில் என்பன. கருத்தாப்பொருள், சாத்தனோடுவந்தான், சாத்தனொடுவந்தான், சாத்தனுடன்வந்தான் என்பன. உடனிகழ்ச் சிப்பொருள், இம்மூன்றுபொருளுமூன்றும்வேற்றுமைக்கெனக்காண்க.

இவற்றின் விகற்பமெல்லாம் விரிந்த நூலுட்கண்டு கொள்க.

கூ. நான்காம்வேற்றுமைக்குருபு மேற்கூறிய கு, ஒன்றுமேயாம். அதன்பொருள் எழுவகைப்படும்.

உ-ம். தேவனுக்குக் கொடுத்தான் எ-து, கொடைப்பொருள், அவனுக்குவிரோதி எ-து. பகைப்பொருள, தேவனுக்குப்பலியிட்டான் எ-து. நேர்ச்சிப்பொருள, விளக்குக்கெண்ணெய், இதுவுமது, அவனுக்குரித்து, அவனுக்குத்தகும் எ-ன. தகுதிப்பொருள், அவனுக்குநெல், கைவளைக்குப்பொன், எ-ன. அதுவாதற்பொருள், கூலிக்குவேலைசெய்தான், தண்ணீர்க்குபபோனான் எ-ன. பொருட்டுப்பொருள், அவனுக்குமகன், அவளுக்குக்கணவன் எ-ன. முறைப்பொருள் இவற்றின்வேறுபாடுமறிக.

எ. ஐந்தாம்வேற்றுமைக்கு உருபு மேற்கூறிய இன்னேயன்றி, இல்லுமாம். பொருள், நீக்கப்பொருள், உவமைப்பொருள், எல்லைப்பொருள், ஏதுப்பொருள் என் நால்வகைப்படும்.

உ-ம். ஊரினீங்கினான் எ-து. நீக்கம், புலியிற்பாய்ந்தான், உவமை கருவூரின்கிழக்கு, எல்லை, வேலிற்குத்தினான் எ-து. ஏதுப்பொருள, இவ்வாறேயில்லுருபையுமொட்டிக்காண்க. பிறவுங்கண்டுகொள்க.

அ. ஆறும்வேற்றுமைக்கு உருபு மேற்கூறிய அதுவேயன்றி ஆது, உடைய, அ, என்பனவுமாம், இதன் பொருளதற்கிழமை பிறிதின்கிழமை எனவிருவகைப்படும்.

உ-ம். சாத்தனதுகுணம் எ-து.பண்பு,சாத்தனதுகை எ-து. உறுப்பு, நெல்லதுபோர் எ-து. ஒன்றன்கூட்டம், விலங்கினதுதொகை எ-து. பல்வினீட்டம், மஞ்சளதுபொடி எ-து. திரிபினாக்கம், இவை தற்கிழமைப்பொருள், சாத்தனது பொன், சாத்தனது பண்டம்

என்பன. பொருள், சாத்தனது தோட்டம், சாத்தனது நிலம் எ-ன. இடம், சாத்தனது நாள், சாத்தனது திவசம் எ-ன. காலம், இவைபிறிதின கிழமை, சாத்தனது, சாத்தனுடைய எனவும் ஒட்டிக்கொள்க.

தனகைகள் எனதாள்கள் என அகரவுருபு பன்மைப் பொருளிலேவருமெனக்காண்க. பிறவுங்கண்டுகொள்க.

௯. ஏழாம்வேற்றுமைக்கு உருபு மேற்கூறிய கண்ணேயன்றி-இல்லும்-இடவிகற்பங்களைக் காட்டவருகின்ற மேல் கீழ்முதலிய அனைத்துமாம்.

உ-ம். மனைக்கண்ணிருந்தான், மனையிலிருந்தான், மரத்தின்மேலிருந்தான், மரத்தின்கீழிருந்தான் என்றாற்போல, இடவிகற்பப்பெயர்களையெல்லாம் ஒட்டிக்காண்க. இதற்கு இடப்பொருளொன்றேயாம்.

௰. எட்டாம்வேற்றுமைக்கு உருபு உருபேற்ற பெயரினிறுதி திரிதலும், குறைதலும் இறுதியிலேவேறெழுத்துமிகுதலும், இறுதி யியல்பாதலும், ஈற்றுக்கு அயலெழுத்துத்திரிதலும் அளபெடுத்தலுமுதலியவாம்.

உ-ம். காவலான், காவலாய்கேள் எ-ம். சாத்தன், சாத்தகேள் எ-ம். சாத்தன், சாத்தனே எ-ம். சாத்தன், சாத்தன்கேள் எ-ம். மங்கைமார், மங்கைமீர் எ-ம். பெருமாள், பெருமாஅள எ-ம். முறையே காண்க.

இதற்குப்பொருள்படர்க்கை யிடத்தானைத் தனக்கெதிர்முகமாக வழைக்கப்படுதலெனக்காண்க. பிறவுமன்ன.

௰௧. இனி யிவ்விளியுருபு அண்மைவிளி சேய்மைவிளி புலம்பல்விளியென மூவகைப்படும்.

உ-ம். தேவன், தேவஎன ஈறுகெடாதுங்கெட்டும்வருவன. அண்மைவிளி, தேவா அஅ, தேவனே எ என ஈறுகெட்டுங் கெடாதுமளபெடுத்துவருவன. சேய்மைவிளி, ஐயவோ, அப்பாவோ என ஈறுகெட்டு ஓகாரமிகுந்தும், ஈறுகெட்டு அயலெழுத்துத்திரிந்து ஓகாரமிகுந்தும்வருவன. புலம்பலவிளி, அண்மைசமீபம், சேய்மைதூரம்.

௰உ. இனி யிவ்வுருபுகளின் பொருளோடு மற்றோருருபின்பொருளுமியைந்து நிற்பது பொருளின்மயக்கமாம்.

உ-ம். வேலாற்குத்தினான், வேலிற்குத்தினான், ஊரிற்சென்றான், ஊர்க்குச்சென்றான், பாயொடுபடுத்தான், பாயிற்படுத்தான் எனவரும்பிறவுங்காண்க.

௰௩. இனி யோருருபின் பொருளோடு மற்றோருருபு இயையாது நிற்பது உருபுமயக்கமாம்.

உ-ம். அலைக்கேதுயின்றான், மணற்கீன்றகிழங்கு, அவனொடுசொன்னான் என்பன. அலையிலேதுயின்றான், மணலிலீன்றகிழங்கு, அவனைநோக்கிச்சொன்னான் எனவருமுருபின்பொருளோடு இயைபின்றிக்கு ஒடு என்பன நிற்றலாலுருபுமயக்கமெனக்காண்க. பிறவுமன்ன.

௰௪. இனிச்செய்யப்படுபொருளொன்றாயின். முதல் சினையிரண்டிடத்தும் ஐயுருபுவாராது, முதற்பொருளுக்கு ஐயுருபுவந்தாற் சினைப்பொருளுக்குக் கண்ணுருபுவரும். கண்ணுருபு முதற்பொருளுக்குவந்தால், ஐயுருபு சினைப்பொருளுக்குவரும் எனக்கொள்க.

உ-ம். யானையைக்கோட்டின்கண் வெட்டினான், யானையின் கட்கோட்டைவெட்டினான் எனவரும். இனியானையைக்கோட்டைவெட்டினானெனவரின் அது உருபுமயக்கமெனக்கொண்டுயானையதுகோட்டைவெட்டினானென ஐயுருபைத்தள்ளி அது உருபுவிரித்துக்கொள்க.

௰௫. இனி எழுவாயுருபும் விளியுருபு மொழிந்த ஆறுருபுகளும் புணரும்போதிடையே யின்சாரியை வரவும்பெறும்.

உ-ம். வேலினை, வேலினால், வேலிற்கு. வேலினில், வேலினது, வேலின்கண் எனவரும்.

ஆயின் இன்னுருபொன்றும் இன்சாரியையைப் பெறாதெனக்கொள்க. பெறாதாதலினுதாரணமின்று,

௰௬. இனிநான் என்னுந்தன்மையொருமைப்பெயரும் நீயிர், நீவிர் என்னும், முன்னிலைப் பன்மைப்பெயர்களும் எழுவாயாய்நிற்பதேதவிர ஐமுதலியவேழுருபுகளையுங்கொள்ளாவெனக்காண்க. உதாரணமின்று.

௰௭. இனி தான், தாம், நாம் என்பன மூன்றும் நெடுமுதல்குறுகி ஐமுதலிய ஆறுருபுகளையுமேற்குமெனக்கொள்க.

உ-ம். தன்னை, தம்மை, நம்மை, தன்னால், தனக்கு, தன்னின், தனது, தன்கண் எனவரும் பிறவற்றொடுமொட்டுக.

௰௮. இனியான், யாம், நீ, நீர் என்பனமுறையே என், எம், நின், நும் எனத்திரிந்துநின்று அவ்வாறுருபுகளையு மேற்குமெனக்கொள்க.

உ-ம். என்னை, எம்மை, நின்னை, நும்மை, என்னால், எம்மால், நின்னால், நும்மால், எனக்கு, எமக்கு, நினக்கு, நுமக்கு, என்னின், எனது, என்கண், எனவரும் பிறவற்றொடுமொட்டுக.

தான்முதலிய இவ்வெழுவகைச் சொற்களொடு குவ்வுருபுபுணரும்போது இடையிலே அகரச்சாரியைவருதலும், தனிக்குறின்முன்ஞெற்றிரட்டியாது நிற்றலும் மரபெனக்கொள்க.

௰௯. இனி மகரவீற்றுப்பெயர்ச்சொற்க ளுருபேற்கும்போது அத்துச்சாரியை யிடையிலேவந்தே நிற்குமெனக்கொள்க.

உ-ம். மரத்தை, மரத்தோடு, அறத்தை, அறத்தோடு எனவரும். மற்றவுருப்புகளையும், பிறமகரவீற்றுப்பெயர்களோடு மிவ்வாறேயொட்டிக்கொள்க.

இதனுள் மகரவீறுகெட்டு உயிரீருய் நிற்றலின் அத்துச்சாரியையின் அகரங்கெட்டும் புணர்தல் மரபெனவுணர்க.

௨௰. இனி எல்லாமென்னும்பொதுப்பெயர் அஃறிணையைக்குறித்துநின்றபோது அற்றுச்சாரியை பெற்று உருபேற்று முற்றும்மையும்பெற்றுநிற்கும், உயர்திணையைக்குறித்து நிற்கும்போது நம்முச்சாரியை பெற்று அவ்வாறுநிற்குமெனக்கொள்க.

உ-ம். எல்லாவற்றையும், எல்லாவற்றொடும் எ-ம். எல்லாநம்மையும், எல்லாநம்மொடும் எனவும்வரும். ஏனையவற்றொடுமொட்டுக.

௨௧, இனி வகரவீற்றுப்பலவறிசொல்லும் அகரவீற்றுப்பலவறிசொல்லும் அற்றுச்சாரியைபெறுமெனக்கொள்க.

உ-ம். அவற்றை, இவற்றை, அவற்றொடு, இவற்றொடு. எ-ம். பலவற்றை, பலவற்றொடு, சிலவற்றை, சிலவற்றொடு, எனவும்வரும். பிறவற்றொடுமொட்டுக.

இனிப்பிறவென்பதூம், அகரவீற்றுளடங்கி நிற்றல் காண்க.

௨௨. இனி, ஆ, மா, கோ, ஊ, என்பன. உருபேற்கும்போது, னகரச்சாரியைபெற்றும், அதனொடு பிற சாரியைபெற்றும், பெறாதியல்பாயும் வருமெனக் கொள்க.

உ-ம். ஆனை, ஆனொடு, மானை, மானொடு, கோனை, கோனொடு, ஊனை, ஊனொடு, எ-ம். ஆனினை, மானினை, எ-ம். ஆவை, ஆவொடு, எ-ம். வரும் பிறவற்றொடுமொட்டுக.

ஆவினை, மாவினை என் னகரச்சாரியையின்றியின்சாரியைபெறுதலுங்கண்டுகொள்க.

௨௩. இனியிவ்வுருபுப்புணர்ச்சி வேற்றுமைப்பெயர்ப்புணர்ச்சியைப்பெரும்பாலுமொத்து நிற்குமெனக்கொள்க.

உ-ம். பொற்குடம், கட்குடம், என்பனபோல. பொற்கு, கட்கு, எனவும், மலைக்குவடு, கிளிச்சிறை, என்பனபோல. மலைக்கு, கிளிக்கு, எனவும்வந்தன.

பிறவுங்கண்டுகொள்க. சிறுபான்மை யொவ்வாது வருதற்கு.

உ-ம். சாத்தன்கண், சாத்திகண், நம்பிகண், அவன்கண், வான்கண், எனவரும்.

இவற்றைப்பொதுப்பெயருயர்திணைப் பெயராதலி ஞெத்துவந்தன வென்பாருமுளர்.

௨௪. இனியுருபுப்புணர்ச்சியையொத்துப்பொருட் புணர்ச்சியும் பெரும்பாலும்வரும்.

உ-ம். மரத்துக்கோடு, எல்லாவற்றுக்கோடும், என விப்பொருட் புணர்ச்சியுருபுப்புணர்ச்சியைப்போல, அத்துச்சாரியையும், அற்றுச் சாரியையு முற்றுமமையும்பெற்று நின்றன. தன்னை, தம்மை, நம்மை, என்னை, எம்மை, நின்னை, நும்மை, என்னுமுருபுப் புணர்ச்சியை யொத்து. தன்கை, தம்பொருள், நங்கிளை, என்பொருள் எம்மூர், நின் கிளை, நும்மூர், எனப்பொருட் புணர்ச்சியும்வந்தன. இனியொவ்வா துவருதற்கு.

உ-ம். அவற்றை, இவற்றை, என்னுமுருபுப்புணர்ச்சியை அஃ கெடுத்தான். இஃகெடுத்தான். என-ஒவ்வாதுவந்தன. பிறவுங்கண்டு கொள்க.

---

## சொல்லிலக்கணம்.

க. சொல்லாவது தனிமொழியும், தொடர்மொழி யும், பொதுமொழியுமென மூன்றுவகையாகித்தன்னை யுமிருதிணையைம்பாற் பொருள்களையும் விளக்குமென க்காண்க.

உ-ம். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், மண், பொன், என்றற் போல்வன, தனிமொழி. நிலப்பனை, பனங்காய், நிலங்கடந்தான், கங்கைகொண்ட சோழபுரம், நிலங்கடந்தநெடுமுடியண்ணல, என் றற்போல்வன, தொடர்மொழி. வேங்கை, தாமரை, எட்டு, கொட்டு, எழுந்திருந்தான், எனறற்போல்வன.

ஓரோர் மொழிகளாய் நின்று, ஒருபொருளைத்தந்த துமன்றி, வேருங்கை, தாவுமனை, எள்ளையுண், கொள்ளையுண், எழுந்துபின்னிருந்தான், எனப்பலமொழிகளாய்ப் பலபொருள்களையுந் தந்து நிற்றலாற்பொது மொழிகளெனக்காண்க.

௨. சொற்றன்னை விளக்குதலெவ்வாறெனின், நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தன, அவன், அவள், அவர், அது, அவை என்பனமுன்பு வினைச்சொற்கள் பெயர்ச்சொற்களெனத் தம்மையுணர்த்திப் பின்பு இருதிணையைம்பாற் பொருள்களையுணர்த்தியவென்க, பிறவுமன்ன.

௩. இருதிணையாவன. உயர்திணை-அஃறிணையென்பனவாம். உயர்திணை-உயர்வாகியசாதி. அஃறிணை-அது அல்லாதசாதி, அல்திணை-அஃறிணையெனத்திரிந்துநின்றது. திணை, சாதி.

௪. மனிதருந்தேவரும், நரகரும்-உயர்திணையாம். அவரொழிந்த உயிருள்ளனவாகியபொருள்களுமுயிரில்லனவாகிய பொருள்களும், அஃறிணையெனக்காண்க.

௫. இனியவ்வுயர்திணை ஆண்பால், பெண்பால், பலர்பாலென மூன்று பாலையுடையதெனவும், அஃறிணை ஒன்று-பல-என்கின்ற இரண்டுபாலையுடையதெனவுங் கொள்க.

உ-ம். அவன், அவள், அவர், எனவும், அது, அவை, எனவும்வரும்.

இனிக்கள்ளீறு விகுதிமேல் விகுதியாய், அவர்கள், என உயர்திணையிலும், அவைகள், என அஃறிணையிலும் விரவிவரும். அன்றியும், விகுதியின்றிப் பால்பகா அஃறிணைப்பெயர்களைச்சார்ந்து அத்திணைப்பன்மையைக்காட்டலுமுண்டெனக்கொள்க.

உ-ம். பரிகள், கரிகள், மரங்கள், எனவரும். பிறவுங்காண்க.

௬. இனி ஆண்மை, பெண்மை, விரவியபேடுகள் ஆணிலக்கணமுயர்ந்து காணப்பட்டால், பேடன்வந்தான், என ஆண்பாலாகவும், பெண்ணிலக்கணமுயர்ந்து காணப்பட்டால், பேடிவந்தாள், எனப்பெண்பாலாகவும், சமநிலையாயின், பேடுவந்தது போயிற்று. என அஃறிணையாகவும் வழங்கப்படுமெனக்காண்க.

௭. இனி யிவ்வுயர்திணை யஃறிணை யிரண்டினும் விரவிவருவது பொதுத்திணையெனப்படும்.

உ-ம். சாத்தனிவன், சாத்தனிக்காளை, சாத்தி இவள், சாத்தியிப் பசு, கோதை, இவன், இவள், இது, செவியிலி, இவன், இவள், இது, தந்தை, இவன், இவ்வெருது, தாயிவள், இப்பசு, எ-ம். நான் புருடன், நான்ஸ்திரீ, நான்பூதம், நீ ஆண்மகன், நீ பெண்மகள், நீ பூதம் எ-ம். தான், அவன்தான், அவள்தான், அதுதான் எ-ம். தாம், அவர்தாம், அவைதாம் எ-ம், எல்லாம், அவரெல்லாம், அவையெல்லாம், எனவும்வரும் பிறவுங்கண்டுகொள்க.

௮. இனியிச்சொல் குறிப்புச்சொல்வெளிப்படைச் சொல்லெனவிருவகைப்படும்.

உ-ம். மக்கள் எ-து, ஆண்மக்கள், பெண்மக்களிரண்டிற்கும் பொது, பெற்றம் எ-து. காளை, பசு, இரண்டிற்கும் பொதுவாதலாலிவை போல்வனவு மேற்கூறிய பொதுத்திணையுளடங்கி நின்றனவுஞ்சொற்கேட்டமாத்திரமே பொருளறியக்கூடாமையிற் குறிப்புச்சொற்களாம்.

இவ்வாறன்றிக் கேட்டமாத்திரமே பொருளறியப்படுவனவாகிய நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்றாற்போல்வன வெல்லாம் வெளிப்படைச்சொற்களெனக்காண்க.

௯. இனியிச்சொல் இயற்சொல்லெனவுந் திரிசொல்லெனவுமிருவகைப்படும். அவற்றுளியற்சொல்லாவது, செந்தமிழ்நாட்டுச்சொல்லாயாவர்க்கும்பொருள்விளங்கிநிற்பது.

உ-ம். நிலம், நீர், தீ, காற்று. ஆகாயம், யானை, குதிரை, கிளி, மயில், குயில்எனவும், நடந்தான், வந்தான், போயிற்று எனவும் வருவன முதலியவெல்லாம் இயற்சொல்லெனக்காண்க. பிறவுமன்ன.

௰. இனித்திரிசொல்லாவது, ஒரு பொருளைக்குறித்துவரும் பலசொற்களெனவும், பலபொருளைக்குறித்துவருமொருசொல்லெனவுமிருவகைப்படும்.

உ-ம். கிள்ளை, சுகம், தத்தை, என்பன கிளியென்னுமொருபொருள்குறித்து நின்றன. அச்சம், முனி, கரீரம் என்பன அகத்திமரமென்னுமொருபொருள்குறித்து நின்றன. சுறவும், பூந்தாதும், மகரமென்பதும் கூர்மையும், வசியமும், வாளும், வசியென்பதும் பலபொருள் குறித்துநின்றன்.

இனிவினைச்சொல்முதலியவற்றுள்ளுமிவ்வாறேகண்டுகொள்க.

௰௧. இனியிச்சொல், பெயர்ச்சொல், வினைச்சொல் இடைச்சொல், உரிச்சொல், திசைச்சொல், வடசொல் என அறுவகைப்படும். இவற்றுள் பெயர்ச்சொல்லாவது, இடுகுறி காரணமென்னு மிரண்டினையும்பற்றி யெட்டுவேற்றுமைகளுஞ் சார்தற்கிடமாகி யிருதிணை யைம்பால் மூவிடங்களைக்காட்டிநிற்கும்.

உ-ம். மரம், இடுகுறிப்பொதுப்பெயர். பனை, இடுகுறிச்சிறப்புப்பெயர். அணி, காரணப்பொதுப்பெயர். முடி, காரணச்சிறப்புப்பெயர். இனிவேற்றுமைக்கிடமாதற்கு.

உ-ம். சாத்தன், சாத்தனை, சாத்தனால், சாத்தனுக்கு, சாத்தனின், சாத்தனது, சாத்தன்கண், சாத்தா எனவரும். இருதிணையைம்பாலைக்காட்டுதற்குதாரணம். அவன், அவள், அவர், இது உயர்திணை முப்பால், அது, அவை, இது அஃறிணையிருபால், ஆக இருதிணையைம்பாலுங் கண்டுகொள்க.

இனி மூவிடங்களைக்காட்டிநிற்றற்கு.

உ-ம். மேற்கூறிய இருதிணையைம்பாலும் படர்க்கையிடமெனக் காண்க. நான், யான், இவைபொருமைப்பால். நாம், யாம், இவை பன்மைப்பால். இவ்விருபாலுமே தன்மையிடம். நீ, என்பது ஒருமைப்பால். எல்லீர், நீயிர், நீவிர், நீர், இவைபன்மைப்பால். இவ்விருபாலுமே முன்னிலையிடம் எனக்காண்க.

௰௨. இன்னுமிப்பெயர்ச்சொல், தொழிற்பெயர், முதனிலைத்தொழிற்பெயர், வினையாலணையும்பெயரெனவுஞ்சொல்லப்படும்.

உ-ம். ஆடல், பாடல், ஆடுகை, பாடுகை, ஆட்டு, பாட்டு, ஆடுதல், பாடுதல், காணல, நீளல், காணுதல, நீளுதல, காட்சி, நீட்சி, காணுகை, நீளுகை, காண்கை, நீள்கை, காணடல், நீடல், என்றற்போல்

வன, தொழிற்பெயர். அறியிலான், குறியிலான், என்பன அறிதற்றொழிலிலான், குறித்தற்றொழிலிலான், என நிற்றலால், முதனிலைத்தொழிற்பெயர், படித்தவன், வந்தவன், படிக்கின்றவன், வருகின்றவன், படிக்கிறவன், வருகிறவன், படிப்பவன், வருபவன், எ-ம், படித்தான் வந்தான், படித்தானைப் பார்த்தேன், படித்தானொடு போயினான், படித்தானுக்குக்கொடுத்தான், படித்தோனிற்பெரியன், படித்தோனது தன்மை, படித்தோன்கண்ணிருந்தான், படித்தோய்கேள் எ-ம், வருவன. வினையாலணையும்பெயரெனக்காண்க. பிறவுமன்ன.

௰௫. இவ்வினையாலணையும் பெயரினீற்றயல், ஆகாரம் ஒகாரமாய்த்திரிதலுமுண்டெனக்கொள்க.

உ-ம். பெரியோர்வந்தார், வலியோர்கொள்வர், சிறியோன்செய்கை, நன்றிமறந்தோய், எனவரும்பிறவுங்கண்டுகொள்க.

இவ்வினையாலணையும்பெயர், தெரிநிலைவினையாலணையும்பெயருங் குறிப்புவினையாலணையும்பெயருமெனவிருவகைப்படும். வலியோர் சிறியோர் பெரியோன் என்றாற்போல்வன, குறிப்புவினையாலணையும்பெயரெனவும், இரப்போர், ஈவோர், சென்றோர், வந்தோர். என்றாற்போல்வன, தெரிநிலைவினையாலணையும்பெயரெனவும், உயிர்ப்பொருள், உயிரில்பொருள், காட்சிப்பொருள், கருத்துப்பொருள் என்பனவிற்றைக் காட்டிவருவனவெல்லாம் பெயர்ச்சொற்களெனவுந் தொகுத்துணர்ந்துகொள்க.

௰௬. இனிவினைச்சொல்லாவது, வேற்றுமையுருபுகளைக்கொள்ளாமல், கருத்தா, காரணம், இடம், செய்

கை, காலம், செய்யப்படுபொருள், என்கின்ற ஆறை யும், விளக்கிநிற்பதெனக்கொள்க. இவ்வாறினுள் இது காலத்தைவிளக்கும்போது தெரிநிலையாலுங் குறிப்பா லுங் காலத்தைவிளக்குமெனவும், தெரிநிலையாற்காலத் தைவிளக்குவது, தெரிநிலைவினையெனவுங் குறிப்பாற் காலத்தைவிளக்குவது, குறிப்புவினையெனவுமுயத்து ணர்ந்துகொள்க.

உ-ம். படித்தான், என்றால், ஆன்விகுதியால், ஒருவன், எனக்கருத் தாவையும், வாயினால், எனக்கருவியையும், நிலத்தின்கண், என இட த்தையும், படித்தலென்னும் புடைபெயர்ச்சியாகிய செய்கையை யும், தெரிநிலையாக இடைநின்ற தகர ஒற்றுவிறந்தகாலத்தையும், நூலையெனச்செயப்படு பொருளையும் விளக்கி, நின்றமை கண்டு கொள்க.

இனியிவ்வாறினுள்ளுஞ் சிலகுறைந்து நிற்கும்வினை களுமுள.

உ-ம். ஆடினான் என்றதிற்செயப்படுபொருள் குறைந்துநின்றது. உறங்கினான் என்றதிற் செயப்படு பொருளொடுகருவியுங்குறைந்தன. பிறவுங்கண்டுகொள்க.

௰௫. பொருள், இடம், காலம், சினை, குணம், தொ ழில், என்னுமிவ்வாறினுளொன்று பகுதியாகி முன்னி ற்கவிகுதியேற்றுநிற்பது.குறிப்புவினையெனக்கொள்க.

உ-ம். பொன்னன், நிலத்தன், ஆதிரையான், கண்ணன், கரியன், ஊணன், எனவரும். உடையன், நடையன், ஒட்டத்தான், என்றாற் போல்வனவு மிவற்றுள்டங்கிநின்றன. உடையன், என்பதில், விகுதி யாற்கருத்தாவும், ஒன்றினால், எனக்கருவியும், ஒன்றை, எனச்செயப்

படுபொருளும், நிலத்தின்கண், என இடமும், உடையனுயினன், என க்குறிப்பினால், இறந்தகாலமும், உடையனாதல், எனச்செய்கையும், விளங்கி நிற்றல்காண்க, பிறவுங்கண்டுகொள்க.

குறிப்புவினைகளெல்லாம் விகுதியாற் கருத்தாவைத் தெரிநிலையாகவேவிளக்கலும், ஒழிந்தவைந்தையுங்குறிப்பாக விளக்கலுமியல்பெனக்காண்க.

௰௬. இனித்தெரிநிலை குறிப்பென்னுமிரண்டுவினைகளு முற்றிநின்றபோது பெயராக்கொண்டுமுடிதலிலக்கணமெனக்கொள்க.

உ-ம். படித்தான்பராயணன், குழையன்கொற்றன், எனவரும். பிறவுமறிந்துகொள்க.

௰௭. ஏவல்வினையாவன தெரிநிலைவினையின் பகுதிகளேயாம். அவையேவல்வினையாங்கால் பகுதிப்பொருளொழிய நிற்குமெனக்கொள்க. உதாரணமேற்பகுதிக்குக்காட்டியவேகொள்க. இதுமுன்னிலை யிடமொன்றையேபெறும்.

௰௮. இவ்வேவல்வாய்பாடுகளோடு, உம்மென்னும்விகுதியாவது. அதனோடுகூடக் கள்ளென்னும் விகுதியாவது, சேர்ந்து முன்னிலைப்பன்மையேவல்களாம்.

உ-ம். பாடும், பாடுங்கள், வாரும், வாருங்கள், எனவரும் பிறவுங் காண்க.

௰௯. இனி யிம்முன்னிலையேவலோடு, வி, பி, கு, சு, டு, து, பு, று, என்னுமிவைதனித்துமிணைந்தும்வருமாயினிரண்டு மூன்று நான்கேவல்களாயும் வரும்.

உ-ம். நடப்பி, நடப்பிவி, வருவி, வருவிப்பி, போக்கு, போக்குவி, போக்குவிப்பி, பாய்ச்சு, ஊட்டு, நடத்து, எழுப்பு, சுழற்று, என வரும். பிறவற்றோடுமொட்டுக.

௨௰. இவை முற்றுவினை யாங்கால், ஏவல்கொண்டனவும் பகுதியாமெனவும் பிறவினையெனவுங்கண்டுகொள்க.

உ-ம். நடப்பித்தான், நடப்பிவித்தான், போக்கினான், போக்குவித்தான், போக்குவிப்பித்தான் எனவரும், பிறவற்றோடுமொட்டிக்கொள்க.

பிறவினையெனினுந் தன்வினைப்பகுதிகளே பிறவினைப்பகுதிகளாய் வேறுபட்டு நின்றனவென வுயத்துணர்ந்துகொள்க.

௨௧. இனிவியங்கோளாவது, இருதிணையைம்பால், மூன்றிடங்கட்கும்பொதுவாய் ஏவற்கருத்தைக்கொண்டு நிற்கின்றதோர், வினைமுற்றுச்சொல்லேயாம்.

உ-ம். வாழ்க; வாழிய, வாழியர், வரவேண்டும், செயவேண்டும். செய்யல் எனவரும். வழக்கிடத்து, கவ்வீற்று வியங்கோளும், உம்மீற்றுவியங்கோளுமே பயின்று வாராநின்றன. அவன் படிக்கக்கடவன் எனவிரித்து வியங்கோளென்பாருமுளர். அவன் என்னுமெழுவாய் படிக்கவென்னும் வியங்கோண்முற்றுப்பயனிலை கொண்டுமுடிந்தது. கடவன் என்னுங்குறிப்புமுற்று வேண்டாதுநின்றமையான் அது உதாரணமன்று அன்றி அவன் கடவன் எனப்பயநிலையாக்கிற்படிக்கவென்பது வினையெச்சமா யிடைப்பிறவரலாய் நிற்பதன்றி வியங்கோளாகாதென மறுக்க.

௨௨. இனி யிவ்வினை, செய்வினை, செயப்பாட்டுவினை, விதிவினை, அல்லது, உடன்பாட்டுவினை, மறை

வினை, அல்லது, எதிர்மறைவினை, தன்வினை, பிறவினை, எச்சவினை, முற்றுவினை, முற்றெச்சவினை என்பனமுதலாய்ப் பலவேறுவகைப்பட்டு வருதலுமுயத்துணர்ந்துகொள்க.

உ-ம். வீடுகட்டினான் எ-து, செய்வினை, வீடுகட்டினது எ-து, செயப்பாட்டுவினை எ-ம், உண்டான், உறங்கினான், என்றாற்போல்வன, உடன்பாட்டுவினை எ-ம், உண்ணான், உறங்கான், என்றாற்போல்வன, எதிர்மறைவினை யெனவும், நடந்தான், வந்தான், என்றாற்போல்வன, தன்வினை, எனவுங்காண்க.

ஒழிந்த விகற்பங்களெல்லாமூன்னும் பின்னுமுயத்துணர்ந்துகொள்க.

உரு. இனி யெச்சவினையென்பது குறைந்தவினையாதலால், பொருண்முற்றாது குறைபட்டே நிற்குஞ்சொல்லெனக்கொள்க. அது பெயரெச்சமெனவும் வினையெச்சமெனவுமிருவகைப்படும். அவற்றுள்பெயரெச்சமாவது, முக்காலத்திற்குரிய சொற்களாய்ப்பெயர்ச்சொல்லை விசேஷிப்பதாய்க் குறைந்துநிற்பதெனக்கொள்க.

உ-ம். நடந்த (சாத்தன்,) நடக்கின்ற (சாத்தன்,) நடக்கும் (சாத்தன்,) எனவருமுக்காலவாய்பாடுகள் மூன்றுஞ் சாத்தனென்னும், பெயர்ச்சொல்லைவிசேடித்துக்குறைபட்டு நின்றமைகாண்க.

நடவாதசாத்தன் என்பது, எதிர்மறைப்பெயரெச்சம், இது ஈறுகெட்டுநடவாச்சாத்தன் எனவருதலுமுண்டு. இனிவாவும்புரவி, தாவுமனாயென்னுமெதிர்கால

ப்பெயரொச்சம், வாம்புரவி, தாமரை என இடைநின்ற உயிர்மெய்கெட்டுநிற்றலுமுண்டு. பெரியசாத்தன், நல்லசாத்தன் என்றாற்போல்வன, குறிப்புப்பெயரொச்சம், அல்லாத சாத்தன், இல்லாத சாத்தன் என்பன, எதிர்மறைக்குறிப்புப்பெயரொச்சம் பிறவுங்கண்டுகொள்க.

௨௪. இனி, வினையெச்சமாவது, அதற்குரிய வாய்பாடுகளிலே தொழிலுங்காலமுந் தோன்றிநிற்கப்பால்காட்டும் விகுதிகளின்றிக் குறைந்தசொல்லாய் வினையைக்கொண்டு முடிய நிற்பதாம்.

உ-ம். நடந்து, நடக்க, நடக்கின், நடப்பின், எனவரும்.

இவை வினைவிகற்பங்களையெல்லாங்கொண்டுமுடியுமெனக்கொள்க.

உ-ம், நடந்துவந்தான், நடக்கவந்தான், நடக்கின்வருவான், இவைதெரிநிலை முற்றுவினைகொண்டன. நடநதுபோய் என்பது, வினையெச்சங்கொண்டுமுடிந்தது. நடந்துபோன எ-து, பெயரொச்சங்கொண்டது. நடந்துபோனவன், எ-து, வினையாலணையும் பெயர்கொண்டது. நடந்துபோ, எ-து, ஏவல்வினைகொண்டது, நடந்துபோதல், எ-து, தொழிற்பெயர்கொண்டது. நடந்துபோகான், எ-து, எதிர்மறை முற்றுவினைகொண்டது. நடந்துபோகாமல், எ-து, எதிர்மறைவினை யெச்சவினைகொண்டது. நடந்துபோகாத, எ-து, எதிர்மறைப்பெயரொச்சவினைகொண்டது. பிறவற்றொடு மேற்றபடி யறிந்தொட்டிக்கொள்க. நடவாது, நடவாமை, நடவாமல், இவை எதிர்மறைவினை யெச்சங்கள். எதிர்மறைவினைவிகற்பங்களெல்லா முக்காலத்திற்கும் பொதுமையினித்தமெனவுணர்க. நடந்தால், நடக்குமேல், என்பனமுதலாகப் பிறவாறுவருவனவும் வினையெச்சங்களென வுயத்துணர்ந்துகொள்க. அன்றி, அல்லாது, அல்லாம

ல், அல்லாமை, இன்றி, இல்லாது, இல்லாமல், இல்லாமை, இவை குறிப்பு வினையெச்சம். இவற்றிற்கு வினைகொடுத்து முடித்துக்கொள்க. இனிப்படியாதிருக்கிறேன், படியாதிருந்தேன், படியாதிருப்பேன், என்பனவற்றை யொவ்வொரு காலத்தைக்காட்டிய வெதிர்மறை வினையெனச்சொல்வாருமுளர். இவை யிரண்டுவினைச்சொல்லாய் முன்னின்றது எதிர்மறை வினையெச்சமும், பின்னின்றது உடன்பாட்டு முற்றுவினைச்சொல்லுமாதலால், முன்னின்றது பண்டும்படியாது. இன்றும்படியாது, மேலும்படியாது, என மூன்றுகாலத்திற்கும் பொதுப்படநிற்குமெனக்கொண்டு அதுகருத்தன்றென்க. இனி உண்டிலன், உண்ணுநின்றிலன் என்றற்போல்வன, ஒவ்வோர்காலத்தைக் காட்டிநின்ற எதிர்மறை முற்றுவினைச்சொற்களென்க. பிறவுமன்ன.

இனி நீபடியென்பது, முன்னிலை யொருமையுடன் பாட்டேவல். நீபடியேல், படியாதை என்பன, எதிர்மறை யொருமையேவல். நீர்படியும், நீர்சொல்லும், படிமின், சொன்மின் என்பன, முன்னிலைப்பன்மையுடன் பாட்டேவல். நடவன்மின், உண்ணன்மின், முன்னிலைப்பன்மை யெதிர்மறையேவல். நடவற்க, உண்ணற்க, உண்ணல்என்பன, எதிர்மறைவியங்கோள் முற்றுவினைச்சொற்கள், உண்ணல் என்பது, உடன்பாட்டுவியங்கோளாயும்வரும் பிறவுங்காண்க.

௨௫. இனிவினைப்பகுதியோடே, தல், அல், கை, பு, சி, வி, உ, என்பன பிறவுஞ்சேர்ந்து, தொழிற்பெயராகநிற்கும்.

உ-ம். நடத்தல், படித்தல், செல்லல், வரல், நடக்கை, ஈகை, நடப்பு, காப்பு, ஆட்சி, நீட்சி, தோல்வி, கல்வி, வாழ்வு, தாழ்வு, எனவரும். பிறவுங்காண்க.

இனி யிறந்தகால நிகழ்காலப்பெயரெச்சங்களை மை விகுதியடுத்து அவ்வப்பண்புகளைக்காட்டுந் தொழிற் பெயர்களாதலுமுண்டெனக்கொள்க.

உ-ம். நடந்தமை, நடக்கின்றமை, வந்தமை, வருகின்றமை, என வரும். பிறவுங்காண்க. இன்னும், நிலைமை, நிலையாமை, பொறுமை, பொறுமை, எனவுடன்பாடெதிர் மறையிரண்டினும், மைவிகுதியடுத்துநின்று தொழிற்பெயராதலும், செம்மை, சிறுமை, என்னும் பண்புப் பகாப்பதங்களில், பகுதிப்பொருள் விகுதியாய் நிற்றலுங் காண்க.

௨௯. இனித்தெரிநிலை வினைமுற்று வினையெச்சமாயும், குறிப்புமுற்றுப் பெயரெச்சமாயும், வினையெச்சமாயும்வருமெனக்கொள்க.

உ-ம். நடந்தான் வந்தான் எனின், முன்னின்றவினை நடந்துவந்தான் எனவினையெச்சப்பொருள்படநின்றது. வில்லன், வேலன் வந்தான் எனின், வில்லையுடையனாய், வேலையுடையனாய்வந்தான் எனப்பொருள்படுதலால், குறிப்புமுற்றுக்கள் வினையெச்சமாயின. குழையன் கொற்றன்வந்தான், எனின், குழையைத்தரித்த கொற்றன்வந்தான் எனப்பொருள்படலாற் குறிப்புமுற்றுப்பெயரெச்சமாயிற்று பிறவுமன்ன.

இனிப்பொதுவகையால் மேற்கூறிய விருவகைப் பொருள்களின் புடைபெயர்ச்சியை யுணர்த்தவருவனவெல்லாம் வினைச்சொல்லெனவுயத்துணர்ந்துகொள்க.

வினையிலக்கண முற்றிற்று.

## இடைச்சொல்லிலக்கணம்.

௧. இடைச்சொல்லாவது, தனித்துநடத்தற்கேலாது. பெயர்வினைகளைச்சார்ந்து மவற்றிற்குறுப்பாயும் வருஞ்சொல்லாம்.

உ-ம். மரத்தை எனின், அத்து, ஐ, என்பனவிரண்டும், மரமென்னும் பெயர்ச்சொல்லைச் சார்ந்துவந்தன. நடத்தலாலே, எனின், தல், ஆல், ஏ, என்பனமூன்றும், நடவென்னும், வினைச்சொல்லைச் சார்ந்துவந்தன. நிலத்தர், விருந்தினர், எனின், அத்தும், இன்னும், அர்விகுதியும், பெயர்க்குறுப்பாய்வந்தன. வந்தனன், உறங்கிற்று, எனின், த், இன், என்னுமிடைநிலை யிடைச்சொற்களும, சாரியையும்,விகுதிகளுமாகியவிடைச்சொற்களும், வினைக்குறுப்பாய்வந்தன.

இனியிவ்வாறுவருங்கால முன்னேனும் பின்னேனும் ஒன்றேனும் பலவேனும் வருமெனக்கொள்க.

உ-ம். ஏ எ யிவள், மற்றொன்று, முன்வந்தன. அன்றை, இன்றை, பின்வந்தது. புளியங்காய், புற்றுஞ்சோறு, இடையிலேவந்தன. வேலால், எனவொன்றும், மரத்தினுல்எனப் பலவும்வந்தன.

௨. இனி யிவ்விடைச்சொற்கள் வேற்றுமையுருபுகளும், வினையுருபுகளும், சாரியைகளும், உவமையுருபுகளும், தத்தம் பொருள்களையுடையனவும், இசைநிறைப்பனவும், அசைநிலையாவனவும், குறிப்பின்வருவனவுமென எட்டுவகைப்படும். வேற்றுமையுருபுகள், ஐ, ஆல் முதலிய. வினையுருபுகள், விகுதிமுதலிய. சாரியை அன்,ஆன்முதலிய.இவைமேலேசொல்லப்பட்டன. உவமையுருபுகள், போல, புரைய, ஒப்ப, உறழ, மான,

கடுப்ப, நேர, நிகர, இயைய, எய்ப்ப, அன்ன, அனைய, ஆங்கு என்பன முதலியவாம். வரலாறு, புலிபோலவந்தான், தாமரைபுரையுஞ்சேவடி, அதற்கொப்பமுடிந்தது, செல்லுறழ்தடக்கையான், புலிமானப்பாய்ந்தான், புலிகடுப்ப, புலிநேர, புலிநிகர்ப்ப, புலியியைய, புலியேய்ப்பப் பாய்ந்தான். புலியன்ன சாத்தன், புலியனையசாத்தன, அருளாட்சி யாங்கில்லையூன்றின்பவர்க்கு எனவரும். இவ்வுருபுகள் பெயரெச்ச வினையெச்சவாய்பாடுகளாய்வருதல்கண்டுகொள்க. இனித்தத்தம் பொருளைத் தருமிடைச்சொற்களாவன், ஏ, ஓ, ஆ, உம், என், என்று, ஒடு, கொல், மன், மற்று, தில், அம்ம, இவைமுதலியவாம் எனக்காண்க.

௫. அவற்றுள் ஏகாரம் ஆறுபொருளிலேவரும்.

உ-ம். அரசர்க்கேதகும் என்றது, தேற்றம். சாத்தனேவந்தவன் எ-து, வினா. நிலனே நீரோதீயே எ-து, எண். அவருளிவனே திண்ணியன் எ-து, பிரிநிலை. என்னு நாமத்திருந்தவத்தோனே எ-து, ஈற்றசை. ஏ யே யிதென்னுடலெடுத்தேன் எ-து, இசைநிறையெனக்காண்க.

௬. இரண்டாவது, ஓகார மெட்டுப் பொருளிலே வரும்.

உ-ம். இவருளவனோசெய்தான் எ-து, பலருளொருவனைப் பிரித்தலாற்-பிரிநிலை. நீயோசொன்னாய் எ-து, வினா. படிக்கவோவந்தான் எ-து, விளையாடவந்தான் எனவொழிந்த பொருளைத்தருதலால் ஒழியிசை. நானோசொன்னேன் எ-து, சொல்லவில்லையென நிற்றலா

ல்.எதிர்மறை ஒஒபெரியன், எ-து, மிகவும்பெரியன், எனநிற்றலால், சிறப்பு. ஒஒஉவமமுறழ்வின்றியொத்தது, எ-து, அசைநிலை. நலலறஞ்செய்திலரோ, எ-து, அதனாற்கெட்டாரெனக் கழிந்ததற்கிரங்கலால், கழிவு. சாத்தனோ அல்லன், கொற்றனோ அல்லன், இவன்யார், எ-து, ஆராய்தற்கண்வருதலால், தெரிநிலையெனக்காண்க.

## ௫. மூன்றாவது, ஆகாரம் ஐந்துபொருளிலேவரும்.

உ-ம். சாத்தனா, எ-து, வினா. ஆகெட்டான், எ-து, இரக்கம். ஆ இவன்கல்வியேகல்வி, எ-து, வியப்பு. இல்லாப்பொருள், எ-து, அசைநிலை. பொய்யாமை, எ-து, எதிர்மறை. பிறவுங்காண்க.

## ௬. நாலாவது, உம்மையெட்டுப்பொருளிலேவரும்.

உ-ம். வருதற்குமுரியனெனின், வாராமைக்குமுரியனெனப்படுதலால், எதிர்மறை. சாத்தனும்வந்தான், எனின், கொற்றன்வந்ததன்றியெனநிற்றலால், இறந்ததுதழுவியஎச்சவும்மை. அது இனிக்கொற்றனும்வருவானெனவும் பொருள்படுமாதலால், எதிரதுதழுவியஎச்சவும்மை. கண்ணிரண்டுங்குருடு, எ-து, முற்றும்மை. நிலனும், நீரும், தீயும், காற்றும், ஆகாயமும் எ-து, எண். உறற்பால நீக்கலுறுவார்க்குமாகா, எ-து, இருவகைப்பற்றையும் விலக்கிய இருடியார்க்கும், விதியை விலக்கலாகாதெனநிற்றலால் சிறப்பும்மை. பத்தாயினுமெட்டாயினுங்கொடு, எ-து, ஐயம். பாலுமாயிற்று, எ-து, அதுவேமருந்துமாயிற்றுஎன்றுதலால்ஆக்கம். சாத்தனுமல்லன், கொற்றனுமல்லன், இவன்யார், எ-து, தெரிநிலை. எனவரும். பிறவழிவருதலுமிவ்வாறே கண்டுகொள்க.

## ௭. ஐந்தாவது, என, என்று, என்பனவிரண்டும், ஆறுபொருளிலேவரும்.

உ-ம். வருகெனவெழுந்தான், எ-து, வினையிடைவந்தது. ஊரெனப்படுவதுறையூர், எ-து, பெயரிடைவந்தது. பொள்ளெனவெகுளார், எ-து, விரைவுக்குறிப்பு. கடலொல்லெனவொலித்தது, எ-து, இசை. நிலனென, நீரென, தீயென, வளியென, எ-து, எண். காரெனக்கறுத்

தது, வெள்ளென விளர்த்தது, எ-து, பண்பு. இவ்வாறிவற்றோடு, என்றென்பதனையு மொட்டியுதாரணங்கண்டுகொள்க.

**௮. ஆறாவது, ஒடுவென்பது எண்ணிடைச்சொல் லாயும், இசைநிறை யிடைச்சொல்லாயும்வரும்.**

உ-ம். நிலனொடு - நீரொடு, தீயொடு-வளியொடு, எ-து, எண். போர் தொடுபொதுள, எனவரின், போதுபொதுளவென்றே பொருள்படு மாதலால், இசைநிறை.

**௯. ஏழாவது, கொல், எ-து, ஐயப்பொருளுணர்த் தியுமசைநிலையாயும்வரும்.**

உ-ம். அணங்குகொல், எ-து, அணங்குதானோ. எனப்பொருள் படுதலால், ஐயப்பொருளைத்தந்தது. கற்றதனாலாயபயனென்கொல், எ-து, அசைநிலையெனக்காண்க.

**௰. எட்டாவது, மன், எ-து. ஆறுபொருளிலேவரும்.**

உ-ம். அதுமற்கொண்கன்றேரோ எ-து, அசைநிலை. கூரிய தோர்வாள்மன், எ-து, பலமில்லாதேபோனாலும் எனவொழிந்தபொ ருளைத்தழுவுதலால், ஒழியிசை. பண்டுகாடுமன், எ-து, இன்றுநகரா யிற்று எனப்பொருள்படுதலால், ஆக்கம். சிறியகட்பெறினேயெமக் கீயுமன்னே, எ-து, ஈதல்கழிந்ததெனவிரங்கலால், கழிவு. மன்னுயிர், எ-து, மிக்கவுயிரெனப்படுதலால், மிகுதி. மன்னியதுபுரிமோ, எ-து, நிலைத்ததைச்செய்-எனப்படுதலால்-நிலைபேறு.

**௰௧. ஒன்பதாவது, மற்று, என்பது. நான்குபொரு ளிலேவரும்.**

உ-ம். கெடுப்பதூஉமற்றெடுப்பதூஉம் எ-து, கெடுக்காமலெடுப் பதூஉமெனப்பொருள்படுதலால், வினைமாற்று. மற்றொன்றுரை எ-து, பிறிதொன்றுரை எனப்பொருள்படுதலால், பிறிது. மற்றுங்கூடுமனை மடித்துயில் எ-து, இனிமேலுங்கூடுமெனப்பொருள்புடுதலால், கால ம். மற்றறிவாமென்பதுமது. விசும்பிற்றுளி வீழினல்லான்மற்று எ-து,

அசை நிலை, இது, வீழ்ந்தாற்காண்பதெளிது-அல்லாற்காண்பரிது. எனப்பொருடந்து இவ்விடைச்சொல் வேண்டாதே நிற்றலாலசை நிலையாம்.

மஉ. பத்தாவது, தில், எ-து, மூன்றுபொருளிலே வரும்.

உ-ம். அரிவையைப்பெறுகதில்லம்மயானே எ-து, யானேபெறுக வெனவிழைதலால், விழைவு. பெற்றாங்கறிகதில்லம்மவிவ்வூரே எ-து, பெற்றகாலத்தறிகவெனக்காலத்தையறிவித்தலால்காலம். வருகதில் லம்மவெஞ்சேரிசேர எ-து, வந்தாலின்னதுசெய்வேனென வொழிந் தபொருளைத் தழுவிநிற்றலால்ஒழியிசை.

மங. பதின்மூன்றாவது, அம்ம என்பது, இரண்டுபொருளிலேவரும்.

உ-ம். அம்மகொற்ற எ-து, கேள்கொற்ற என நிற்றலால். கேட் பித்தல். அம்மவென்றிவினைப்பயனை யென்சொல்லுகேன எ-து, அசை நிலை.

மச. இனி எண்ணிடைச்சொல்லின்றி, எண்ணிவருவது, செவ்வெண்ணெனப்படும்.

உ-ம். சாத்தன், கொற்றன், தேவன், பூதனுல்வரும்வந்தாரெனவரும்.

மரு. இனி இச்செவ்வெண்ணெச்சவும்மை பெற்று வருதலுமுண்டு.

உ-ம். சாத்தன், கொற்றன், தேவன்-பூதனும்வந்தான்-எனவரும் பிறவுங்காண்க.

மசு. செவ்வெண்ணும்ஏ, எனு, என்று-என்னுமிடைச் சொற்களும் எண்ணிநிற்கும்போது தொகைபெற்று நடக்கும்.

உ-ம். சாத்தன், கொற்றன், தேவன், பூதனென நால்வருளர். சாத்த னே கொற்றனே தேவனே பூதனே யாகநால்வருளர்-இனி-என, என் றுவென்பனவற்றோடு மிவ்வாறொட்டிக்கொள்க.

௬௭. இனி உம்மையெண், என்றெண், எனவெண், ஒடெண் ஆகிய விந்நான்கெண்ணும் தொகைச் சொல் லில்லாமலும் நடக்கும்.

உ-ம். நிலனும், நீருந், தீயும், வளியும், ஆகாயமுமாய்விரிந்ததுல கம்-எனவரும். மற்ற மூன்றோடுமிவ்வாறேயொட்டிக்கொள்க.

௬௮. இனி இவ்வெண்ணிடைச்சொற்கள் வினையோ டுவந்தாலுமிம்முறை பிறழாமலே வரத்தக்கவைவரும்.

உ-ம. கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று, அறியுமைம்புல னும் எ-ம், காணலே, கேட்டலே, உண்ணலே, உயிர்த்தலே, உறு தலேயைந்துமைம்பொறித்தொழில் எனவும்வரும்பிறவற்றொடுமொட் டிக்கொள்க.

இனிவினையிடைத்தொகைபெறாது வருதற்கு.

உ-ம். கண்டுங், கேட்டும், உண்டும், உயிர்த்தும், உற்றுமறிவன புலத்தொழில், காணவென்று கேட்கவென்று கற்கவென்றுவந்தான். காணவெனக்கேட்கவெனவந்தான். ஆடலோடு பாடலோடுவந்தான் எனவரும்பிறவுமுயத்துணர்ந்துகொள்க.

இனியிசைநிறைகுறிப்பின் வருமிடைச்சொற்களை மேலேகாட்டியவுதாரணங்களுட்கண்டுகொள்க.

௬௯. இனி முன்னிலைக்கண்வருமசைநிலை யிடைச் சொற்களாவன. மியா, இக, மோ, மதி, அத்தை, இத் தை, வாழிய, மாள, ஈ, யாழ என்பனவாம்.

உ௰. எல்லாவிடத்தும் வருமசை நிலையிடைச்சொற்களாவன. யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, இகும், சின், குரை, ஒரும், போலும், இருந்து, இட்டு, அன்று, ஆம், தாம், தான், என், ஆல் என்பவும் பிறவுமாம். இவற்றிற்கெல்லாமுதாரணஞ் செய்யுளிடத்துக்காண்க. எழுந்திருந்தான், வந்திட்டான், புல்லைத்தின்னுமாங்கன்றுக்குட்டி, அவர்தாஞ் சொன்னார், அவன்றான்சொன்னான், எளியராய் நின்றார், சொல்லிவிட்டுப்போனான், என்பவைகளுள் இருந்துமுதலானவைகள் வழக்கிடத்துவரும் அசைநிலையிடைச்சொல்லெனக்காண்கபிறவுமன்ன.

இடைச்சொல்லிலக்கணமுற்றிற்று.

---

## உரிச்சொல்லிலக்கணம்.

க. உரிச்சொல்லாவது, பலவகைப்பட்ட பண்புகளையுங் காட்டப்படுஞ்சொல்லாயும், ஒருசொல் ஒருகுணத்தையும் பலகுணங்களையுந்தழுவுவதாயும், பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும்விட்டு நீங்காததாயும் உளதெனக்காண்க. பலவகைப்பட்டபண்புகளாவன. ஐவண்ணமும், வட்டஞ் சதுரமுதலியபலவேறுவகைப்பட்ட வடிவுகளும், பெருமைசிறுமைமுதலி

ய வளவுகளும், இனிப்புப்புளிப்பு முதலியசுவைகளும் முதலியவாம். இனிப்பண்பு குணப்பண்பு, தொழிற் பண்பென விருவகைப்படும்.

உ-ம். செம்மை, சிறுமை, வெண்மை, பொன்மை, முதலியன, குணப்பண்பு. ஆடல், பாடல், ஒடல், அணிதல், பணிதல் முதலியன தொழிற்பண்பு. இனியொருசொல்லொரு குணத்தைத் தழுவுதற்கு காரணமிவற்றுட்கண்டுகொள்க. கடி எ-து, கவியாணமும், கூர்மையும், காப்பும், புதுமையுமுதலியபலவேறு குணங்களைத்தழுவி நின்றதெனக்காண்க.

இனிச் செந்தாமரை வெண்டாமரை என்றாற்போல் வன் பெயர்ப்பொருளை விசேடித்துப் பெயர்ச்சொல்லைவிட்டு நீங்காது நின்றன. சாலக்கொடுத்தான், மிக நொந்தான், வலியத்தேடினன், நனிதின்றான்-என்றாற் போல்வன. வினைப்பொருளைவிசேடித்து அச்சொல்லைவிட்டு நீங்காது நின்றனவெனக்காண்க.

௨. இக்குணப்பண்பு, தொழிற்பண்புகளைக்காட்ட வருவனவெல்லாமுரிச்சொல்லாமெனினும், அவைபெயர்த்தன்மை, வினைத்தன்மைப்பட்டபோது பெயருள்ளும் வினையுள்ளுமடங்கிப்போம்.

உ-ம். செம்மைநன்று, வெளுப்புத்தீது, என்றாற்போல்வன. பெயர்த்தன்மைப்பட்டு எழுவாயுருபேற்றுநின்றன. சிவந்தது, வெளுத்தது, கறுத்தது, என்றாற்போல்வன. காலங்காட்டிப்புடைபெயர்ச்சியையுணர்த்திமுற்றுவினையாயினவாறுகாண்க.

௩. இவ்வாறுபெயர்வினையுளடங்காது, கூரிருள், கூர், உறுகால், உறு, தவப்பல, தவ, நனிபேதை, நனி, கடி

மிளகு, கடி, புதுமணம், புதுமை, கருங்கடல், கருமை, சிறுபாம்பு, சிறுமை, பெருங்கொம்பு, பெருமை என நிற்பனவேயுரிச்சொல்லெனக்காண்க. இனியுரிச்சொல், வினையுரிச்சொல், பெயருரிச் சொல்லென்றிருவகைப் படுமெனக்கூறி, சாலப்பேசினான், உப்புக்கூர்ந்தது என்றாற்போல்வன. வினையுரியென்றும், செய்யகமலம் அழகியநடை என்றாற்போல்வன. பெயருரியென்றுங் கூறுவாருமுளர். சால, கூர்ந்தது என்பன வினைத்தன் மைப்பட்டுமுறையேசெயவென்னும் வாய்பாட்டுவி னையெச்சமாயும், முற்றுவினைச்சொல்லாயும், செய்ய, அழகியஎன்பன குறிப்புப்பெயரெச்சங்களாகியும் நிற் றலாலது இலக்கணமன்று, இவ்வாறுபெயர்வினையுள டங்காது, கூரிருள், கடிமிளகு, செந்தாமரையெனப் பொதுப்பட நிற்பனவேயுரிச்சொல்லென மேலே சொல்லியபடி கண்டுகொள்க.

உரிச்சொல்லிலக்கணமுற்றிற்று.

---

இனித்திசைச்சொல்லாவது, திசைகளினின்றும் தமி ழ்நாட்டிலேவந்து வழங்கப்படுவதாம்.

உ-ம். பசுவை, பெற்றம் என்றும். தாயை, தள்ளை என்றும். தந்தையை, அச்சன் என்றும். வஞ்சரை, கையர் என்றும். தோட்டத்தை, கிழார் என்றும். சிறுகுளத்தை, பாழி என்றும். கழனியை, செய என்றும். புளியை, எகின் என்றும். தோழனை, எலுவன் என்றும். வழங்கப்படுவனமுதலியவாம் பிறவுங்கண்டுகொள்க.—முற்றிற்று.

இனிவடசொல்லாவன, தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொதுவாகிய எழுத்துகளாலும், ஆரியத்திற்கேயுரிய சிறப்பெழுத்துத் திரிந்தவெழுத்துக்களாலும் பொதுவுஞ்சிறப்புமாகிய விருதிறத்தெழுத்துக்களாலுமியைந்து தமிழிலேவருவனவும் பிறவுமாமெனக்கொள்க.

உ-ம். கமலம், குங்குமம் என்றாற்போல்வன. பொதுவெழுத்தாலியைந்துவந்தன. அரமியம், சித்தி என்றாற்போல்வன. சிறப்பெழுத்துத் திரிந்தவெழுத்தாலியைந்துவந்தன. அரி, அரன் என்றாற்போல்வன. இருதிறத்தெழுத்துக்களாலியைந்துவந்தன எனக்காண்க.

## ஆரியவெழுத்துக்கள திரிந்து தமிழெழுத்துகளாய் வருமாறு.

௧. ஆரிய உயிரெழுத்துள் ஏழாமுயிராகிய-ஐ-என்பது, இ-இரு-எனத்திரிந்துவரும்.

உ-ம். விடபம், இருடி எனவரும்.

௨. எட்டாமெய்யாகிய-ஜ-என்பதும், முப்பதாமெய்யாகிய-ய-என்பதும், மொழிமுதலிலே சகரமாகவும், இடையிலே-யகரமாகவுந்திரியும்.

உ-ம். சகம், பங்கயம், எனவும். சங்கரன், மயாநம, எனவும்வரும்.

௩. முப்பத்தொன்றுமெய்யாகிய-ஷ-என்பது,முதலிலேசகரமாகவும், இடையிலேடகரமாகவுந்திரியும்.

உ-ம். சட்டி, விடயம், எனவரும்.

௪. முப்பத்திரண்டாமெய்யாகிய-ஸ-என்பது,முதலிலே சகரமாகவும், இடையிலே தகரமாகவுந் திரியும்.

உ-ம். குத்திரம், ஆதநம், எனவரும்.

ரு. முப்பத்துமூன்றமெய்யாகிய-ஹ-என்-து, முத லிலே அகரமாகவும், இடையிலே ககரமாகவுந்திரியும்.

உ-ம். அரி, மோகம் எனவரும்.

௬. முப்பத்தைந்தாமெய்யாகிய-க்ஷ-என்பது,முத லிலே ககரமாகவும், இடையிலே யிரண்டு ககரங்களாக வுந்திரியும்.

உ-ம். கமை, தக்கணம் எனவரும்.

எ. இனி ஆகார ஈறெல்லாம் ஐகாரவீறாயும். ஈகார வீறெல்லாம் இகரவீறாயும்வரும்

உ-ம். கமலா, கமலை, உமா, உமை, துர்க்கா, துர்க்கை எ-ம், மேதிநீ, மேதிநி, கௌரீ, கௌரி எனவும்வரும்.

அ. இனி ரகரமுதன்மொழிக்கு, அ, இ, உ, என்னு ம் அம்மூன்று குற்றெழுத்து முன்வந்து நிற்கும்.

உ-ம். அரங்கம், இராமன், உரோமம் எனவரும்.

௯. லகரமுதன்மொழிக்கும் யகரமுதன்மொழிக் கும், இ, உ, என்னுமிரண்டு முன்வந்துநிற்கும்.

உ-ம். இலாபம், உலோபம், இயக்கன், உயோகு, எனவரும்.

௰. இனி இரண்டெழுத்துக்கள் கூடியிணைந்துநடக் கும்போது, ய, ர, ல, என்னுமூன்றிற்கும் இகர முன்னிற்கும்.

உ-ம். வாக்கியம், வச்சிரம், சுக்கிலம் எனவரும்.

௰க. மகர வகரஙகட்கு, உகரமுன்வரும்.

உ-ம். பதுமம், பக்குவம் எனவரும்.

௰௨. நகரத்திற்கு இகரமும் அகரமும்முன்வரும்.

உ-ம். இரத்திநம், அரதநம் எனவரும்.

௰௩. அப்படியிணைந்துநடக்கின்ற-ரகரத்திற்குமுன் இகரம்வருவதுமன்றி, அதன்பின் உகரமும்வரும்.

உ-ம். அருத்தம், கருப்பம் எனவரும். இனி உகரம்பெறுது, கன்மம், தன்மம் என, ரகரம் னகரமாய்த் திரிதலும், வம்சம் மாம்சம் என்பன, வமிசம் மாமிசம் என இகரம்வருதலுமன்றி, குச்சாரியை பெற்று, வங்குசம், மாங்குசம் எனவருதலும். மேற்பிறவுமென்றதனால், சக்தி, முக்தி, அப்தி, ஆப்தன், கர்நன் என்பன. சத்தி, முத்தி, அத்தி, ஆத்தன், கன்னன், எனக்கெட்டுந் திரிந்தும் வருவனபோல்வனவுங்கொள்க-பிறவுங்காண்க.

௰௪. இனி அ, அந்-என்பன சொற்களின்முதலிலே வரும்போது, அ, என்பது, மெய்யெழுத்தின் முன்னும் அந்-என்பது, உயிரெழுத்தின் முன்னும்வந்து எதிர்மறுத்துநிற்கும்.

உ-ம். அசுத்தம், அநீதி, அமலம் எனவும், அநாதி, அநாசாரம், அநாதரணை எனவும்வரும்.

௰௫. இனி-நிர்-என்பது, திரியாது. உயிரொழுத்தின் முன்னும் நிந், நிரு-எனத்திரிந்து மெய்யெழுத்தின் முன்னும் வந்தெதிர்மறுத்துநிற்கும்.

உ-ம். நிராயுதன், நிரஞ்சனன், நிரந்தரன் எனவும். நிந்மலன், நிந்நாமன், நிருமலன், நிருமாலியம் எனவும்வரும் பிறவுங்கண்டுகொள்க.

முற்றிற்று.

பொதுவிலக்கணம், இது பெயர்வினை யிடையுரி திசைவடசொற்களென்ற ஆறினுக்கும் பொதுப்பட நின்ற இலக்கணங்களுக்குட் சிலகூறுதலாற் பொது விலக்கணமாம்.

---

## சொற்றொடரியல்.

௧. சொற்றொடர் இருமொழித்தொடர் பன்மொழித்தொடரென விருவகைப்படும்.

உ-ம். நிலங்கடந்தான், வந்தான்சாத்தன், மற்றறிவாம், கடிக்கமலம் என்றாற்போல்வன. இருமொழித்தொடர், நிலங்கடந்தநெடுமுடியண்ணல், கங்கைகொண்டசோழபுரம், சேர சோழ பாண்டியர் என்றாற்போல்வன, சொற்களுஞ் சந்திகளும் பலவாய்வருதலிற் பன்மொழித்தொடரெனக்காண்க.

௨. இத்தொடர் தொகைநிலைத்தொடருந் தொகாநிலைத்தொடருமெனவிருவகைப்படும்.

௩. அவற்றுள்தொகைநிலைத்தொடர் வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என அறுவகைப்படும்.

௪. அவற்றுள் வேற்றுமைத்தொகையாவது, ஐயுருபுமுதலிய ஆறுருபுகளுந் தொக்குநின்றதொடர்மொழிகளாம்.

உ-ம். மரங்குறைத்தான், கல்லெறிந்தான், சாத்தன்மகன், ஊர் நீங்கினான், சாத்தன்கை, விண்மீன் எனவருமிவற்றுள் ஆறுருபுகளுந் தொக்குநின்றமை முறையேகண்டுகொள்க.

ரு. வினைத்தொகையாவது, பெயரெச்சவினைப்பகுதி பெயரைவிசேடித்துநிற்பது.

உ-ம். அடுகளிறு, செய்கருவி, பொருகளம்; செல் செலவு, வாழ் நாள், மிதிமரம் எனவரும்பெயரொன்றது தொழிற்பெயர்முதலியவு மடங்கநின்றது.

௬. பண்புத்தொகையாவது, வண்ணம், வடிவு, அளவு, சுவை முதலிய பண்புச்சொற்கள் பெயரைவிசேடித்துநிற்க இடையேயப்பண்பை விளக்குஞ்சொல், தொக்கு நிற்பது.

உ-ம். செந்தாமரை, வட்டப்பலகை, பதினாயிரம், புளிக்கறி, எனவரும், இவற்றுள் பெயர்ச்சொல், பெயர்ச்சொல்லை விசேடித்துவரின் அது இருபெயரொட்டுப், பண்புத்தொகையெனக் கொண்டு, வாழைமரம், சாரைப்பாம்பு, ஆயன்சாத்தன் என உதாரணங்காண்க.

எ. உவமைத்தொகையாவது மேற் கூறியவுவமையுருபுகள் தொக்குநின்றதொடர்மொழிகளாம்.

உ-ம். பவளவாய், குருவிகூப்பிட்டான், மழைக்கை எனவரும். இவைபவளம்போற்சிவந்தவாய், எனப்பண்பும்,குருவிபோற்கூப்பிட்டான், எனத்தொழிலும், மழைபோற்பயன்படுகை, எனப்பயனும் வெளிப்பட விரிவனவுணர்க பிறவுமன்ன.

அ. உம்மைத்தொகையாவது, எண்ணலளவு எடுத்தலளவு முகத்தலளவு நீட்டலளவு என்னும் நால்வகையளவுப்பெயர்கள் இரண்டும் பலவுமாய்ப் புணர்ந்து நிற்குமிடத்தும் பிறசொற்களவ்வாறு தொடர்ந்துநின்

றவிடத்துமிடையே உம்மென்னுமிடைச்சொல்தொக் குநிற்பதாம்.

உ-ம். பதின்மூன்று, இருபத்தைந்தேகாலேயரைக்கால், இவைபத் தும் மூன்றும், இருபதும், ஐந்தும், காலும், அரைக்காலும், எனவிரி யும். இவையெண்ணலளவு. தொடியேகஃசு இவையெடுத்தலளவு. கலனே தூணிமுந்நாழியுழக் காழாக்கு, இவைகலமும், தூணியும், முந்நாழியும், உழக்கும், ஆழாக்கும் எனவிரியும். இவைமுகத்தலளவு. சாணிருவிரல், கோல்முழஞ்சாண்விரல், இவை சாணுமிருவிரலும், கோலும், முழமும், சாணும்,விரலுமெனவிரியும், இவைநீட்டலளவு, இராப்பகல், முதலிடைகடை, சாத்தன் கொற்றன் தேவன் பூதன் என நால்வருளர். இவைபிற்சொற்களவ்வாறு நின்றன இவற்றிடை யும்மைவிரித்துரைத்துக்கொள்க.

௯. அன்மொழித்தொகையாவது, மேற்கூறியவிவ் வைந்து தொகைச்சொற்களின்புறத்துப்பிறசொற்கள் தொக்குநிற்பதாம்.

உ-ம். பொன்வளைவந்தாள் எ-து, வேற்றுமைத்தொகைப்புறத்து வந்தவன் மொழித்தொகை. பொன்னாற்செய்தவளையைத்தரித்தவள் வந்தாளெனவிரியும். இனிவருவனவற்றையு மிவ்வாறுவிரித்துக்கொ ள்க. தாழ்குழல்வந்தாள் எ-து, வினைத்தொகைப் புறத்துப்பிறந்த வன் மொழித்தொகை. வெள்ளாடைவந்தாள் எ-து, பண்புத்தொ கைப் புறத்துவந்தவன்மொழித்தொகை. பவளவாய்வந்தாள் எ-து, உவமைத்தொகைப்புறத்துவந்தது. உயிர்மெய் எ-து, உம்மைத் தொகைப்புறத்துவந்தது. உயிரும்மெய்யுங்கூடிப் பிறந்ததோரொ ழுத்து எனவிரியும். பிறவாறுவரினு மிவற்றுளுணர்ந்துகொள்க.

௰. இனித் தொகாநிலைத்தொடரொன்பது வகைப் படும். வரலாறு, தெரிநிலைமுற்றுத்தொடர், குறிப்பு முற்றுத்தொடரொன்கின்ற முற்றுத்தொடரொன்றும்,

பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடரிரண்டும், எழுவாய்த்தொடரும், விளித்தொடரும், ஆறு உருபுகள் விரிந்துநின்றதொடரும், இடைத்தொடரும், உரித்தொடரும், அடுக்குத்தொடருமெனக்காண்க. இவற்றிற்கு உதாரணமேலே வேற்றுமைச்சந்தியல்வழிச் சந்திக்குக்காட்டியவற்றுட்காண்க.

௬௧. இனித்திணை, பால், இடம், காலம், வினா, விடை, மரபு, என்கின்ற எழும், வழுவிவரிற்குற்றமாமெனச் சொல்லுவர் புலவரென்றுணர்க. வரலாறு, நம்பியிவன் என்னாமல், நம்பியிது, பசுஇதுஎன்னாமல், பசுஇவன் என்றாற்போல்வன, திணைவழு. வந்தானிவனென்னாது, வந்தானிவள், பாடினளிவளென்னாது, பாடினளிவன், வந்தது இது என்னாது இவை எனவருவனபோல்வன பால்வழு. அவன்வந்தானென்னாது, அவன்வந்தாய், நீ வந்தாய் என்னாது, நீ வந்தான், நான் வந்தேன் என்னாது, நான் வந்தான் என்றாற்போல்வன, இடவழு. நேற்று வந்தானென்னாது, நேற்றுவருகிறான், வருவான் என்றாற்போல்வன, காலவழு. கறக்கின்ற எருமை பாலோ சினையோ எனவும், ஒருவிரல்காட்டி யிது பெரிதோ சிறிதோ எனவும்வருவனபோல்வன வினாவழு. கடம்பூர்க்கு வழியாதோவெனின் இது வென்னாது, இடம்பூணியென்னாவினகன்று, என்பதுவிடைவழு.

பசுவின்கன்று, ஆட்டுக்குட்டி, எருமைச்சாணி, யானை யிலத்தி யென்றாது, பசுவின்குட்டி, ஆட்டுக்கன்று, எருமையிலத்தி, யானைச்சாணி, எனின் மரபுவழு. இவ் வேழு வழுவும் வாராமலேகாக்கவேண்டுமெனவுணர்க.

௰௨. இனி மரபாவதென்னெனின், எந்தப்பொருளை யெந்தச்சொல்லினாலே யெந்தப்படி முன்னோர்கள் சொன்னார்களோ அந்தப்படியேசொல்வதெனக் காண்க.

௰௩. இனி வழுவமைதியென்பன இவ்வாறுவருகின்ற வழுக்களைப் பிறகாரணம் பற்றியிருக்கலாமெனச்சான்றோராலமைக்கப்பட்டன. அவற்றுள், திணைவழுவமைதி, திங்களுஞ்சாலுஞ்சான்றோரு மொப்பர் எ-து, சான்றோ ரென்னுமுயர்வுபற்றியஃறிணையு முயர்திணையாயிற்று. மூர்க்கனு முதலையுங்கொண்டது விடா எ-து, மூர்க்க னென்றவிழிவுபற்றி யுயர்திணையஃறிணையாயிற்று. வார்க்காரருங்கண்டாளமாடுகளும் வண்டில்களும் வந்தன எ-து, உயர்திணையுமஃறிணையுங் கலந்தெண்ணப்படும் போது, அஃறிணையதிகப்படுதலால், மிகுதிபற்றிவார்க்காரரொன்றுமுயர்திணையுமஃறிணையாயிற்று. துருப்புகளும்வார்க்காரருந் துரைமார்களுந் தம்புருக்காரரும் வந்தார்கள் எ-து, மிகுதிபற்றித் துருப்புகளென்ற அஃறிணை யுயர்திணையாயிற்று. பிறவுங்கண்டுகொள்க.

௰௪. பால்வழுவமைதி, ஒருவனை அவர்வந்தார், நீர் வந்தீர் எ-து, உயர்வுபற்றிவந்தபால்வழுவமைதி. முருகனென்அன்னை என்பதூஉம், மகனையென்அன்னைவந்தாள் என்பதூஉம், மகளையென அப்பன்வந்தான், என்பதூஉம், உவகைபற்றி யாண்பால் பெண்பாலாயும் பெண்பாலாண்பாலாயும்வந்தவழுவமைதி.

௰௫. இடவழுவமைதி, அவனும் நீங்களும் போங்கள் எ-து, படர்க்கை முன்னிலையாயிற்று. சாத்தன்றாயப்படிச்செய்வாளா எ-து, தன்னைப்படர்க்கையிடத்தாளாகச்சொன்னாளாதலிற் றன்மைபடர்க்கையாயிற்று. எம்பியையீங்குப்பெற்றேன் எ-து, முன்னிலையிடத்தனாகியவனைப் படர்க்கையிடத்தனாகக் கூறலின்முன்னிலைபடர்க்கையாயிற்று. பிறவுங்கண்டுகொள்க.

௰௬. காலவழுவமைதி, சாத்தாவிரைந்துவருவாயோ எனின், இதோபோய்வருகிறேன். இதோவந்தேன் எ-து, விரைவுபற்றி யெதிர்காலம் நிகழ்காலமு மிறந்தகாலமுமாயிற்று. எறும்பு முட்டைகொண்டுதிட்டையேறின்மழைபெய்தது, தாயைக்கொன்றான் நரகம் புக்கான், என்பன தெளிவுபற்றியெதிர்கால மிறந்தகாலமாயின. களவுசெய்வோன்கையறுப்புண்டான் எ-து, மிகுதிபற்றி யெதிர்காலமிறந்தகாலமாயிற்று. நாம் பண்டுவிளையாடுவதிச்சோலை, யாம்பண்டுபடிக்கின்

றது. இப்பள்ளிக்கூடம் என்பன இயல்பாகவே இறந்தகாலமெதிர்காலமும், நிகழ்காலமுமாயின. பிறவுங் காண்க.

௰௭. மூன்றுகாலத்துமொத்துள்ளபொருளை நிகழ்காலச்சொல்லாற் சொல்லவேண்டுமென்பர் கற்றோர்.

உ-ம். தெய்வமிருக்கிறது, கடவுளிருக்கிறார், மலைநிற்கின்றது, அவனியைத்தாங்கியரசிருக்கின்றார் என்வரும். இதுவுங்காலவழுவமைதியின்பாற்படும்.

௰௮. இனிவினாவென்பது, அறிவினா, அறியாவினா, சந்தேகவினா, கொளல்வினா, கொடைவினா, ஏவல்வினா, என அறுவகைப்படும்.

உ-ம். ஆசாரியன் மாணாக்கனை யிச்சொற்குப்பொருள்யாது-எ-து, அறிவினா. மாணாக்கனாசாரியனை யிச்சொற்குப்பொருள்யாது எ-து, அறியாவினா. கள்ளனோ கட்டையோவென்பது, சந்தேகவினா. நெல்லுளதோ அரிசியுளதோவென்பது, கொள்ளுதற்பொருட்டாதலால், கொளல்வினா. உனக்குவஸ்திரமில்லையோ என்பது, கொடுத்தற்பொருட்டாதலிற் கொடை வினா. நீயின்னும் போகவில்லையாவென்பது, சீக்கிரப்போவென ஏவற்பொருட்டாதலால், ஏவல்வினா. பிறவுங்கண்டுகொள்க.

இவற்றுள் முன்னின்றமூன்றும், வழாநிலை. பின்னைய மூன்றும், வழுவமைதி.

௰௯. இனிவிடை, சுட்டுவிடை, மறைவிடை, நேர்விடை, ஏவல்விடை, வினாவிடை, உற்றதுரைத்தல்வி

டை, உறுவதுகூறும்விடை, இனமொழிவிடை, என வெட்டுவகைப்படும்.

உ-ம். இச்சொற்குப்பொருள்யாது எனவினுவினுர்க்கு, இது-என்பது, சுட்டுவிடை. நீ யிதுசெய்வாயாவெனின், செய்யேனென்பது, மறைவிடை. அவ்வாறுவினுவினுர்க்குசெய்வேனென்பது, நேர்விடை. இன்னமும் அப்படிவினுவினுர்க்கு, நீ செய் என்பது, ஏவல்விடை அப்படிவினுவினுர்க்கு, யானது செய்வேனு, என்பது, வினுவிடை. நீயுண்பாயோவெனின், வயிறுமொடுமொடுத்தது என்பது, உற்ற துரைத்தல்விடை. மறுபடியுமப்படி வினுவினுர்க்கு வயிறு மொடு மொடுக்கும், என்பது, உறுவதுகூறும்விடை.பாக்குளதோவெனின், வெற்றிலையுளது என்பது, இனமொழிவிடை. இவற்றுள் முன்னைய மூன்றும் வழாநிலை. பின்னைய ஐந்தும் வழுவமைதி-பிறவுங்காண்க.

வழாநிலை, வழு,வழுவமைதிஎன்னுமூன்றினுள் வழாநிலைஎன்பது, இலக்கணம். வழு-எ-து, குற்றம். வழுவமைதி-எ-து, குற்றத்தைப் பிறிதோர்காரணம்பற்றியிருக்கலாமென்று அமைத்துக்கொண்டது.

உ௰. வெவ்வேறுவினைகட்குரிய பலபொருள்களைத் தழுவிநின்றபொதுமொழிகளைப்பொதுவினைகொடுத்தேமுடிக்கவேண்டும்.

உ-ம். அணி, ஆபரணம், என்பன, கட்டுவன, கவிப்பன, இடுவன, தொடுப்பன, தூக்குவன, பூண்பன்வற்றிற்கெல்லாம்பொதுவாதலால, அணி தூக்கியிட்டார். கட்டினுர், ஆபரணம் கவித்தார், தொடுத்தார் என்னுது, அணி யணிந்தார், புனைந்தார்,ஆபாரணம்பூண்டார், தாங்கினுர், இட்டார், என்க.பல்லியம்,என்பது, கொட்டுவன, ஊதுவன,

நடவுவன் வற்றிற்கெல்லாம் பொதுவாகலிற், பல்லியமுழக்கினர். முழங்கிற்று, எழுப்பினர், எழும்பிற்று, அதிர்ந்தன, தழங்கின என்க. ஆயுதம்என்பது, எய்வது, எறிவது, வெட்டுவது, குத்துவதுமுதலிய வற்றிற்கெல்லாம் பொதுவாதலால், ஆயுதம்வழங்கினர். கைதொட்டார் என்க.

உக. இனியுருபுகளும் முற்றுவினைகளும் எச்சவினைகளுங்கொண்டு முடியவருகிறபெயர்க்கும், வினைக்குமிடையிலே யவற்றிற்கேற்ற பிறசொற்கள் வரவும், பெறும்.

உ-ம். சாத்தன்விரைந்துவந்தான், மரத்தையறவெட்டினன், வாளாலோங்கிவெட்டினன், சாத்தனுக்குத்தலைமகன், மலையினின்றிழிந்தான், சாத்தனதுதடக்கை, காட்டின்கட்போயிருந்தான், சாத்தா விரைந்தோடிவா, எனவெட்டுவேற்றுமைகளுங்கொண்டபெயர்வினையிடையவற்றிற்கேற்ற விரைந்து, அற, ஓங்கி, தலை, நின்று, தடம், போய், விரைந்தோடி என்னும் பிற சொற்கள்வந்தவாறும், வந்தானவ்வூர்ச்சாத்தன், குழையன் இளந்தலைக்கோற்றன், நடந்தபுறநகர்ச்சாத்தன், நடந்துநலனோடுவந்தான், எனமுற்றுக்களுமெச்சங்களுங்கொண்ட பெயர்வினையிடை, அவ்வூர், இளந்தலை, புறநகர், நலனோடு என்னும்பிறசொற்கள்வந்தவாறுங்காண்க.

வந்தசாத்தன்மகன் எனின், வருதற்றொழில் மகனதாயிற் சாத்தனென்பதிடை நிற்றல் கூடாதெனவுணர்க. பிறவுமிவ்வாறேயேற்ற சொற்களன்றி யேலாதன வரலாகாவெனவுணர்ந்துகொள்க.

உஉ. இவ்வளவென்றறியவந்தபொருள்களையும், உல

கத்திவில்லாத பொருள்களையும், வினைப்படுத்துரைக்குங்கால் முற்றும்மைக்கொடுத்துக் கூறவேண்டும்.

உ-ம். தமிழ்நாட்டு மூவேந்தரும்வந்தார், கண்ணிரண்டும்நொந்தன, காலிரண்டுமுடமாயின, திசைக்காவலரெண்மரும்வந்தார், நாட்டிலுள்ளவனைவருமறிவார், வீட்டிலுள்ளயாவையுமிழந்தான். எ-ம், ஒருடுகாணமென்றுமில்லை. ஆமைக்கு மயிரொன்றுமில்லை. முயற்குக் கோடொன்றுமில்லை எனவும்வரும்.

௨௩. முற்றும்மையோரோரிடத்தி லெச்சவும்மைப் பொருள்படவுநிற்கும்.

உ-ம். பத்துங்கொடு எனின், மேலுங்கொடு எனவும், பத்துங்கொடாதையெனின், சில்குறையக்கொடு எனவும்வருதலா லெச்சவும்மைப் பொருளாயினவாறுகாண்க.

௨௪. இனி உயர்திணைக்கண்வரு மும்மைத்தொகை பலரீறாய் நிற்கவேண்டும்.

உ-ம். சேர சோழ பாண்டியர், வடுக நாக வணிகர், எனவரும், சேரனுஞ், சோழனும், பாண்டியனும், வடுகனும், நாகனும், வணிகனும்-எனவிரியும்-பிறவுமறிந்துகொள்க.

௨௫. இனிப் பெயர்ச் செவ்வெண்ணிடத்தும்மை வருங்காலீற்றிலேவரவேண்டும்.

உ-ம். சாத்தன், கொற்றன், தேவன், பூதனும்வந்தான். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயமுமழியும் எனவரும் பிறவுங்காண்க.

௨௬. உருபு ஒன்றடுக்கிவரினும், பலவடுக்கிவரினும், வினையொன்றடுக்கிவரினும், பலவடுக்கிவரினும் ஈற்றின்கண் ஓர்முடிக்குஞ்சொல்வரின் முன்னின்றனவெல்லாமதனுன் முடிந்துநிற்கும்.

உ-ம். சாத்தன், கொற்றன், தேவன், பூதன்வந்தான், எனப்பெயர் வேற்றுமையடுக்கி வந்தானென்னுமோர்வினைகொண்டது. சாத்தனைக்கொற்றனைத் தேவனைப் பூதனைவாழ்த்தினுன். கையாற் பிரம்பாற் சாட்டையாலடித்தான். சாத்தனுக்குக் கொற்றனுக்குத் தேவனுக்குப் பூதனுக்குக்கொடுத்தான். மண்ணிற் பொன்னிற் பெண்ணினீங்கினுன். சாத்தனது கொற்றனதுதேவனதுபயிர்நிலம். அரணிற்றரும்பினில், வானிலத்தினில் வசிப்பவனிறைவன், சாத்தா, கொற்ரு, தேவா, பூதாவா என ஐமுதலிய ஆறுருபுகளும் விளியும் ஒவ்வொன்றேயடுக்கியோர்முடிபெற்றன. சாதத்ன்மரத்தை வாளால் பொருட்குக்காட்டினின்று வேரின்கண்வெட்டினுன். என எழுவாய்முதலிய பலவுருபுகளடுக்கிவெட்டினுனென்னுமோர்வினையால்முடிந்தன. ஆடினுன் பாடினுன் ஓடினுன்கொற்றன் எ-ம், வேலன், கடம்பன், வெற்பன், முருகன் எனவுந் தெரிநிலைமுற்றுங்குறிப்புமுற்றுமடுக்கியோர் முடிபெற்றன. ஆடிப்பாடியோடிவந்தான். வாளின்றிவேலின்றித்தேரின்றி வந்தான், பகையன்றியுறவன்றிப்பணிவோடு நின்ருன். என இருவகை வினையெச்சங்களடுக்கி யோர்வினைகொண்டன. ஆடியபாடியவரும் பொறைச்சாத்தன், சிறியபெரியதடக்கையானை எனப் பெயரெச்சங்களடுக்கியோர்பெயர்கொண்டன. இனிப்பலவடுக்குதல் ஆடிப்பாடவடுக்குபுசென்றுன். வாழிய வுண்ணமகிழ்ந்துநின்றுன் - என - ஏற்றவாறறிந்து உதாரணங்காண்க.

௨௭. இனிவினையெச்சங்கள் முற்றுவினையேயன்றியெச்சவினையும் வினையாலணையும் பெயருந்தொழிற்பெயர்முதலியவுங்கொண்டுமுடியும்.

உ-ம். கற்றுணர்ந்தான், கற்றுவல்லன், இது தெரிநிலைமுற்றுக்குறிப்பு முற்றுவினைகொண்டது. நடந்துபோய், நடந்தன்றி, இதுவினையெச்சங்கொண்டுமுடிந்தது. கற்றுயர்ந்த, கற்றுவல்ல, இதுபெயரெச்சங்கொண்டது. கற்றுணர்ந்தவன், கற்றுவல்லவன், இதுவினையாலணையும்பெயர்கொண்டது. நடந்துவருதல், கற்றுணர்தல், இது தொழிற்பெயர்கொண்டது. நடந்துபோ ஏவல்வினைகொண்டது. நடந்துபோகான். எதிர்மறைமுற்றுவினைகொண்டது. பிறவுங்கண்டுகொள்க.

உஅ. இனி யித்தொடர்மொழிகள் மொழித்தொடரென்றும், வாக்கியத்தொடரென்று மிருவகைப்படும். இவற்றுள் மொழித்தொடராவது, பகாப்பதம், பகுபதமெனப்பகுக்கப்பட்ட பெயர்வினை யிடையுரிதிசைவடசொல்லென்னும் அறுவகைச்சொற்களுந் தன்னொடும் பிறிதொடுந்தொடர்ந்து நிற்பதேயாம்.

உ-ம். பனங்காய், அடுக்கிறு, ஓபெரியன், செந்தாமரை, செறுக்குட்டை, வயிரகடகம் எ-ம், குழையன்வந்தான், நிலம்பிளந்தது, குளிர்ந்ததுபூமி எனவும்வரும்பிறவுங்காண்க.

உகூ. வாக்கியத்தொடராவது, வாசகநடையினுஞ் செய்யுளிடத்தும் எழுவாய்பயனிலை இடைப்பிறவரல் செயப்படுபொருள் செயப்படுபொருளடை பயனிலையடை, வினைமுதலடையென்பவற்றோடு சம்பந்தமாய்த் தொடர்ந்து நிற்பதாம். எழுவாய் எ-து, கர்த்தா. பயனிலை எ-து, அக்கர்த்தாவின்வினைமுடிபு. செ

யப்படுபொருளென்றது, அக்கர்த்தாவோர் தொழிலைச்செய்ய அதனைப்படுகின்றபொருளாய் ஐயுருபை யேற்றுநிற்பது. இடைப்பிறவரலென்பது, எழுவாய் பயனிலை யிரண்டினுக்குமிடையே அந்தந்த இடங்களுக்குத்தக்கபடி வருஞ்சில அடைமொழிகளாம்.

உ-ம். பண்டுநான் வீணிலேபலமலர்களைப்பறித்தெறிந்தேன்-என்றதில், நான், எழுவாய், எறிந்தேன், பயனிலை, மலர்களை, செயப்படுபொருள், பண்டு, வினைமுதலடை, பல,செயப்படுபொருளடை,பறித்து, பயனிலையடை, வீணிலே இடைப்பிறவரல், பிறவுங்காண்க.

ரு௰. இனியொருதொடரிலே யோரெழுவாயொரு பயனிலையையும், பலவெழுவாய், பலபயனிலையையுங் கொண்டுமுடிவதுமன்றி யோரெழுவாய்பலபயனிலைகளையும் பலவெழுவாயொரு பயனிலையையுங்கொண்டு முடியும்.

உ-ம். மனிதன்பிறந்தான், வளர்ந்தான், தவழ்ந்தான், நடந்தான், கிடந்தான், இறந்தான் எ-ம், மாமரங்களும், பலாமரங்களும், வாழைமரங்களும் பழுத்திருந்தன எ-ம், வரும்பிறவுங்காண்க.

ருக. தன்மையிடத்தெழுவாயோடே முன்னிலையாவது படர்க்கையாவது, முன்னிலைபடர்க்கை யிரண்டுமாவது, அடுக்கிவந்தால், முற்றுப்பயனிலைதன்மையிடத்தைச்சார்ந்துநிற்கும்.

உ-ம். நானும் நீயுஞ்சென்றனம், நானுமவனும்போனோம், நானும் நீயுமவனுமாய்ப்போனோம், நானும்நீயுமவனுமுண்டும்-எனவரும் பிறவுங்காண்க.

௩உ. முன்னிலையிடத்தெழுவாயோடே படர்க்கை யடுக்கிவந்தால், முற்றுப்பயனிலையம்முன்னிலையிடத் தைச்சாரும்.

உ-ம். நீயுமவனும்போனீர், நீயுஞ்சாத்தனுங் கொற்றனும்போனீர், எனவரும்; இனி முன்னிலையைக்கூடிய தன்மை முன்னிலையாகாது தன்மையேயாய்வருதல், புதியனபுகுதல். உ-ம். நீயும் நானும் போனோம்-எனவரும்.

௩௩. திணைமயங்கிநின்ற சந்தேகப்பொருள்களை விசாரிக்கும்பொழுது இருதிணைக்கும் பொதுவாகிய சொற்களாலே விசாரிக்கவேண்டும்.

உ-ம். கள்ளனோ, கட்டையோ, இதோதோன்றுநின்ற இவன், இது எனின்வழுவாதலால், இவ்வுருவு, இவ்வடிவு, எனல்வேண்டும். பிறவுமன்ன.

௩௪. இனிப்பால்மயங்கிநின்ற சந்தேகப்பொருள்களையும் பொதுச்சொற்களாலேயேவிசாரிக்கவேண்டும்.

உ-ம். ஆண்மகனோ பெண்மகளோ விங்கேதோன்றுநின்ற இவர் எ-ம், ஒன்றோ பலவோ விங்கேபுகுந்தபெற்றம், மாடு, உலர்ந்தமரம், எனவும் வினவுகபிறவுங்காண்க.

௩௫. ஐயச்சொற்களை யடுக்கிச்சொல்லும்போது

பொருந்திய இடைச்சொற்களைச்சேர்த்து எதிர்காலவினையால்முடிக்கவேண்டும்.

உ-ம். காற்றினாலாயினுங்கலத்தினாலாயினுங்கேடுவரும். சாத்தனெனினுங்கொற்றனெனினும்போவான் எனவரும்.

௬௬. ஆலீறுதிவினையெச்சமும், இன்னீறுதி வினையெச்சமும் எதிர்காலவினைகொண்டுமுடியும்.

உ-ம். வந்தால்முடியும் வரின்முடியும் எனவரும். இதுவழாநிலை. எறும்புமுட்டைகொண்டு திட்டையேறினால், ஏறின் – மழைபெய்தது எனவரின் அது காலவழுவமைதியெனக்கொள்க.

௬௭. இனி அகரவீற்றுவினையெச்சம் காரணப்பொருள், காரியப்பொருள், இரண்டுமில்லது. பொருட்டுப்பொருள், வியங்கோட்பொருளைக்காட்டி மூன்றுகாலத்திலும்வரும்.

உ-ம். கேட்கக்கொடுத்தேன் எ-து, கேட்டதினாற்கொடுத்தேன் என இறந்தகாலம்பற்றிநின்றது. ஒளிவர இருள்போயிற்று என்பது மது காரணப்பொருள். குளம்நிறைய மழைபெய்தது, இது நிகழ்காலம்பற்றிநின்றது. காரியப்பொருள். சாத்தனுண்ணக்கொற்றன வந்தான்-எ-து, சாத்தனுண்ணுநிற்பக்கொற்றன்வந்தானென நிகழ்காலம்பற்றிநின்றது. இது காரணகாரியமிரண்டுமில்லது. அவன் சொல்லப்போனான். எ-து, சொல்லும் பொருட்டுப்போனான். என, எதிர்காலம் பற்றிநின்றது. பொருட்டுப்பொருள் வரவீற்றிருக்கவென்றது, வருவீராக. வீற்றிருப்பீராக என வெதிர்காலம்பற்றிவியங்கோட்பொருள்படநின்றுமுற்றிற்று. இன்னுமிவ்வெச்சம்நான்கனுருபேற்றும்வரும்.

உ-ம். உண்ணவந்தான் உண்ணற்குவந்தான் எனவரும், உண்ணற்காகவந்தானெனவிரியும்.

இன்னும் தொகைபற்றியும் இடைச்சொற்பொருளிவ்வெச்சமாகத் திரிந்துவரும்.

உ-ம். ஐந்தும், எட்டும், இரண்டுங்கூட்ட ஆகப்பதினைந்து எ-ம், கன்றுதானே துள்ளியோடிற்று-எ-து, கன்றுதானுகவே துள்ளியோடிற்று-எனவும்வரும்-பிறவுமறிந்துகொள்க.

௯௮. உம்மையெச்சப்பொருளிலே வினையெச்சங்கள்வரினும், காரணமாய்நிற்பதல்லது வேறுபடாதெனக்கொள்க.

உ-ம். கடவுள் பரிசுத்தரென்றறிந்துங்கெட்டார் எ-ம், படித்துங்கெட்டார், எனவும்வரும். அறிவதும்படிப்பதுங் கெடாமைக்கேகாரணமாதலால், அறியாமையும் படியாமையுங் கெட்டதன்றி யென, உம்மையேயெதிர்மறுத்து இறந்ததுதழுவிநின்றதென்க. அறியினும் வாழான், கற்பினும்வாழான், அறிந்தாலும்வாழான், கற்றாலும்வாழான் என்பனவுமன்ன-பிறவுங்காண்க.

௯௯. பலபெயரெச்சங்களடுக்கி யொருபெயரைக் கொள்ளும்போது கடைசியெச்சந்தவிர மற்றப்பெயரெச்சங்களெல்லாஞ்செய்து என்னும் வாய்பாட்டிறந்தகாலவினையெச்சங்களாய்த் திரிந்துநிற்கும்.

உ-ம். அநேகரைக்காப்பாற்றின பற்பல சத்திரங்களைக்கட்டின யாவர்க்குமன்பாய்நடந்துகொண்டதுரை-எ-து, அநேகஞ்சனங்களைக்காப்பாற்றிப் பற்பலசத்திரங்களைக்கட்டி யாவர்க்குமன்பாய் நடந்துகொண்ட துரையிறந்துபோனார்-எனவரும்-பிறவுங்காண்க.

சய. இப்படித்திரியவேண்டியபெயரொச்சங்கள்பல வடைமொழிகள்சேர்வதினாலே, பொருண் மலைவுபட்டு நிற்குமானால், அவைதகுதியான வினைப்பெயர்களா கத்திரிந்து உம்மையோடேசெய்தென்வாய்பாட்டு வினையெச்சத்தைச்சார்ந்து கடைசியிலே நிற்கிற வினை யெச்சந் தகுதியானபெயரொச்சத்தைச் சார்ந்துவரப் பெறும்.

உ-ம். அநேகஞ்சனங்களைக்காப்பாற்றினவருமாய்ப்பற்பலசத்திரங் களைக்கட்டினவருமாய் யாவர்க்குமன்பாய் நடந்துகொண்ட துரை யிறந்துபோனார்-எனவரும், இவ்வாறுவருவதுசெய்யுள் நடையன்று.

சக. ஒருவாக்கியத்திலே மற்றொரு எழுவாயும் பய னிலையும்பல அடைமொழிகளு முள்ளவாக்கியம்வந் தால், அது என்றுஎன் றுமிடைச்சொல்லாலே பிரிக்கப் பட்டு முதல் எழுவாயையும் முதற் பயனிலையையுந் தழுவிக்கொண்டிடைப்பிறவரலாய் நிற்கவேண்டும்.

உ-ம். கொற்றன்வந்து சாத்தன் குதிரையேறிப்போனானென்று சாட்சிசொன்னான். எ-ம், யோவானென்பவர்க்குக் கர்த்தர் தரிசனை யாகிச் சீக்கிரமாய் வருகிறேனுதலால் விழித்துக்கொள்ளுங்களென்று திருவுளம்பற்றினார் எனவும்வரும்பிறவுங்காண்க.

சஉ. தொழிற்பெயரானது பெயர்த்தன்மையா யிருப்பதுமன்றி வினைத்தன்மையாயுமிருக்கும்.

உ-ம். மலையிலேறுகிறது வருத்தமாயிருக்கின்றது. கட்டளையிடுகிறது இலேசானகருமமாயிருக்கின்றது. சூரியன்றோன்றுகையில் இருள் நீங்குகின்றது எனவரும் பிறவுங்காண்க.

சஙு. இனிக்கேட்பதுபோலவும், சொல்வதுபோலவும், நடப்பதுபோலவும், செய்வதுபோலவும், அவ்வப்பண்பில்லாத அஃறிணையிலுஞ் சொல்லுதல் மரபுவழுவமைதி.

உ-ம். நன்னீரைவாழியனிச்சமே. எ-ம், இரவெல்லாநின்றுயாலீரங் கதிர்த்திங்காள்சொல்லு எ-ம், இவ்வழியவ்வூர்க்குப்போம். எ-ம், மந்திதேன்றேவர்க்கீயும் மலைநாட. எ-ம்வரும் பிறவுங்காண்க.

சச. குறிப்பாற் பொருளுணரவருஞ் சொற்களுஞ் சிலவுளவெனக்கொள்க.

உ-ம். செஞ்செவியினர் எனின், சிவந்த ஆபரணங்களையணிந்த செவியினர் எ-ம், வெள்ளொக்கலர் எனின், வெண்மையான ஆடைகளையுடுத்துவாழுஞ் சுற்றத்தையுடையனெனவும், காதணிகொண்டு காக்கையெறிவோனெனின், தாழ்விலாப்பெருஞ் செல்வச் செருக்கினனெனவும் பொருள்படுதல்காண்க. பிறவுமன்ன.

சரு. இனிப் பொருளிடங்காலஞ் சினைகுணந்தொழில், என்னும் ஆறுவிசேடணங்கள் இனமுள்ளவற்றிற்குமினமில்லாதவற்றிற்கும்வரும்.

உ-ம். தயிர்க்குடம், அகத்திணை, தைப்பூசம், குலைவாழை, செந்தாமரை, உழவெருது எனின்முறையே. நெய்க்குடம், புறத்திணை, மாசிப்

பூசம், இளவாழை, வெண்டாமரை, பொதியெருது என வருதலா லினச்சுட்டுள்ளனவற்றிற்குவந்தவிசேடணங்களும். இனி உப்பளம், ஊர்மன்று, கணப்பொழுது, கைக்களிறு, செஞ்ஞாயிறு, நடைவழி எனின், உப்பில்லாத அளமும், ஊரில்லாதமன்றும், கணமில்லாத பொழுதும், கையில்லாதகளிறும், சிவப்பில்லாதஞாயிறும் நடை யில்லாதவழியுமரியனவாதலால், இனச்சுட்டில்லாதனவற்றிற்குவந்த பொருளாதியறுவகைவிசேடணங்களுங்காண்க.

௪௬. இவ்வடைமொழிகளினத்தைக் காட்டலுமன்றி யினமில்லாததையும் ஏற்றவிடத்துக் காட்டுமுண்டு.

உ-ம். சுமந்தான் வீழ்ந்தான் எனின், சுமவாதவன் வீழ்ந்திலன் என இனத்தைக்காட்டினதுமன்றி, அவன்சுமையும்வீழ்ந்தது என இனமல்லாததையுங் காட்டினமைகாண்க. கொழுத்தநண்டுவளையி லிராதென்றால், கொழுக்காதநண்டுவளையிலிருக்குமென நிற்றலுமன் றி அதுவிளைந்துகெடுமென வருதலுங்காண்க. பிறவுமன்ன.

௪௭. இனிமுறையாக ஓரடையும ஓர்சினையுமுதலை விசேடித்துநிற்பனவும். இரண்டடைமுதலை விசேடித்து நிற்பனவும். வழக்கிடத்துப்பயின்றுவரும்.

உ-ம். செங்கால்நாரை, பழக்குலைவாழை, உவர்நீர்க்கேணி, பெருந்த லைச்சாத்தன் எனவும், சிறுகருங்காக்கை, வடதலைநாடு, பெருமத யானை, பாய்சினவெருது, வளர்பெருஞ்சோலை. எனவும்வரும்-பிறவு மன்ன.

௪௮. இரண்டடைசினையை விசேடித்துநிற்றலும் இம்முறை தடுமாறிவருதலுஞ் செய்யுளிடத்தெனக் கொள்க.

உ-ம். கருநெடுங்கண், ஆய்பசுந்தூவி, வளரிளஞ்சூல்எனவும், அருங்குரீப்பசும்பாம்பு, செவிசெஞ்சேவல், கொடுஞ்சினட்பெரும்புலி, தழைவிரிகடுக்கைமாலை, குழவிவெண்டிங்கள், நிலவுபொழிதனிக்கவிகை, அலர்தலைமாநிலம் எனவும்வருதல்காண்க.

சகூ. இனி எல்லைப்பொருளையுணர்த்தவரும் இன் உருபும். ஆறுவது அதுவென்உருபும். பெயர்கொண்டுமுடியும்.

உ-ம். கருவூரின் கிழக்குமருவூர், சாத்தனதுகைஎனவரும்-பிறவுங்காண்க.

ருய. ஒழிந்த வுருபுகள்வினையைக்கொண்டுமுடியும்.

உ-ம். மரத்தைவெட்டினான், கல்லாலெறிந்தான், ஊரினீங்கினான், சாத்தாவா எனவரும் பிறவுங்காண்க.

எழுவாயுருபு வினைபெயர் வினாக்கொளுமெனமேற்கூறினமையாலிங்கே விலக்கப்பட்டது.

ருக. நான்கனுருபும் ஏழனுருபும் வினையையும் பெயரையுங்கொண்டுமுடியும்.

உ-ம். சாத்தனுக்குக்கொடுத்தான், சாத்தனுக்குமகன், மரத்தின்கண்ணிருந்தான், மரத்தின்கட்கோடு எனவரும்பிறவுமன்ன.

இவ்வாறுவருதல் பெரும்பாலுமெனவுய்த்துணர்க.

---

பொதுவியல்முற்றிற்று.

இவ்வாறுசுருங்கச்சொல்லிய விலக்கணங்களையேயே துவாகக்கொண்டு சொல்லாத இலக்கணங்களையுமுயத் துணர்ந்துகொள்ளுதலறிவுடையோர துகடன்.

சொல்லிலக்கண முற்றிற்று.

# இலக்கணச்சுருக்கம்.

---

## முதலாவது.

### எழுத்தியல்.

க. தமிழ்ப்பாடையில், எழுத்துகள், உயிரெ
த்தும், மெய்யெழுத்தும், உயிர்மெய்யெழுத்தும்,
தவெழுத்தும், என நால் வகைப்படும்.

உ. அவற்றுள், அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ
ஔ, இவைபன்னிரண்டும், உயிரெழுத்தென்னப்ப

ங. இவற்றுள், அ, இ, உ, எ, ஒ, இவை யைந்
குற்றெழுத்தென்றும், ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ,
இவை யேழும், நெட்டெழுத்தென்றும், பெ
பெறும்.

ச. மேற்சொல்லியவுயிரெழுத்துகளுள், அ, இ
என்னுமிம்மூன்றும் பொருள்களைக்குறித்துக் க
கின்ற அர்த்தத்திலே, தனித்து மொழிக்குமுன்

[illegible]
கூட்டுக.